# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 04 அதிர்வு 48 ஜூன் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162















ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம்
## 'டன்டிநொங்' இல்
## புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403

royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA
Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

# காற்றுப்போகும் கோத்தாவின் ஆட்சி தோற்றுப்போகும் முன்னாள் சூழ்ச்சி



ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கான உயரிய ஜனநாயக வழியாக மக்கள் ஆணையே கருதப்படுகின்றது. இதற்காகவே ஜனநாயகத் திருவிழா எனக் கருதப்படுகின்ற தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. எனினும் ஜனநாயக கோட்பாடுகளுக்கு - விழுமியங்களுக்கு - முரணான வகையில் ஆட்சி அதிகாரத்தை பிடிப்பதும் - தக்கவைத்துக்கொள்வதுமான குறுக்கு வழி அரசியல் செயற்பாடுகளும் இவ்வுலகில் இடம்பெறவே செய்கின்றன. இந்நிலைமை இலங்கையில் சற்று உச்ச மட்டத்திலேயே உள்ளது என்பதற்கு கடந்த கால சம்பவங்களே சான்று.

அரச இயந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தி, தேர்தல் சட்டங்களுக்கு - நடைமுறைகளுக்கு மதிப்பளிக்காமல் - பரப்புரை போரை முன்னெடுத்து - மக்களின் ஜனநாயக உரிமையைக் கொள்ளையடித்தல், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களை விலைக்குவாங்கி அதன்மூலமாக 'சாதக' விம்பத்தை உருவாக்குதல் உட்பட பல விடயங்களை பட்டியலிடலாம். இவற்றுள் குறிப்பாக எதிரணிகளை அரசியல் ரீதியில் வேட்டையாடி - பலவீனமடையச்செய்து வெற்றிநடைபோடும் த(ம)ந்திரம் என்பது ராஜபக்சக்களுக்கு கைவந்த கலை.

இதனால்தான் கொரோனாவின் கோரத் தாண்டவத்தால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில்கூட மேற்படி வியூகத்தை ராஜபக்ச அணி கையாளத்தொடங்கி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை குறிவைத்துள்ளது.

### தாவல் அரசியலின் ஆரம்பமும் உச்ச பயன்பெற்ற ராஜபக்சவும்

இலங்கையில் முடியாட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு குடியாட்சி மலர்ந்த பின்னர் 1947 ஆம் ஆண்டில்தான் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. இக்காலப்பகுதியில்தான் மக்கள் அரசியலுக்கு அப்பால், கட்சி அரசியலும் முக்கியத்துவம் - முன்னுரிமை - பெற ஆரம்பித்ததுடன், கட்சி தாவும் கலாச்சாரமும் ஆரம்பமானது. 1977 ஆம் ஆண்டுக்கு பின்னரே இந்நிலைமை மோசமானது. கட்சி தாவும் உறுப்பினரின் பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்கும் ஏற்பாடுகள் இல்லாதுபோனதால், தமக்கு தேவையான நேரத்தில் தாவும் நிலைகள் உருவாகின.

போர்க்காலத்தின்போது, புலிகளுக்கு முடிவுகட்டவே அரசுக்கு ஆதரவு என்ற பல்லவியை பாடி 'பல்டி'களுக்கு நியாயம் கற்பிக்கப்பட்டன. ஆனால், 2009 மே மாதம் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக இலங்கை அரசால் அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னரும் இந்நிலைமை நீடித்தது.

குறிப்பாக, போர் முடிந்த பின்னர் ராஜபக்ச தரப்புக்கான செல்வாக்கு சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் கோலோச்சியது. 2009 முதல் 2012வரை நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் அவ்வணி வெற்றிநடை போட்டது. வடக்கு மாகாணத் தேர்தல் மட்டுமே சிக்கலாக அமைந்தது. இருப்பினும், அதனை வைத்தே ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டோம் என பரப்புரை முன்னெடுத்து தோல்வியிலும் வெற்றிகண்டது ராஜபக்ச அணி.

ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை பிளவுபடுத்தி, அக்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிய ராஜபக்ச தரப்பு, பொடியப்பு பியசேனவை தம்பக்கம் இழுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக்கூட ஆட்டம் காணச்செய்தது. எதிரணியை பலவீனப்படுத்தும் ராஜபக்சக்களின் இந்த வியூகம் வெற்றியளிக்க சில ஊடகங்களும் துணை நின்றன - நிற்கின்றன.

மைத்திரியின் ஆட்சிகவிழ்ப்பு சூழ்ச்சியின்போது மட்டுமே, ராஜபக்சக்களுக்கு குறிப்பிட்டளவு எதிரணி உறுப்பினர்களை தம்பக்கம் இழுக்க முடியாமல்போனது. ஆனால், குறுக்குவழி மூலம் கிடைத்த ஆட்சி அதிகாரமும் கைநழுவிப்போனது.

### 2024 ஜனாதிபதித் தேர்தலும் ஐக்கிய மக்கள் சக்தி குறிவைப்பும்

2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாக உடைந்தது. சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கச் உதயமானது. ரணிலின் சகாக்கள் பலர் சஜித்துடன் சங்கமித்தனர். ஐ.தே.கவின் அடிமட்ட அரசியல் இயந்திரமும் சஜித் பக்கம் சுழல ஆரம்பித்தது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. வசம் சிறந்த கொள்கைகளும், முற்போக்கு சிந்தனையும் கொண்ட திட்டங்கள் இருந்தாலும், அக்கட்சிக்கு 3 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறுவதென்பது இன்னமும் அக்கினிப்பரீட்சையாகவே அமைந்துள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் சஜித் தரப்பே மாற்று சக்தியாகவும், எதிர்காலத்தில் ஆட்சியமைக்கும் தரப்பாகவும் கருதப்படுகின்றது.

எனவேதான் அக்கட்சி தலைமையிலான கூட்டணி பாரிய சக்தியாக உருவெடுக்கும் ஆற்றலுக்கு முடிவுகட்டுவதற்கான முயற்சிகள் முன்கூட்டியே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதன்பின்னணியில் மற்றுமொரு நகர்வும் உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தகையோடு, கொரோனா வைரஸின் தாண்டவமும் ஆரம்பமானது. வைரஸ் தொற்று, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே ஆட்சியை முன்னெடுத்துசெல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுக்கடன் சுமையும் அதிகரித்துள்ளது. வாழ்க்கைச்சுமையையும், வாழ்வாதார செலவுகளையும் மக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதனால் மக்கள் மத்தியில் குறுகிய காலப்பகுதியிலேயே இந்த அரசு தொடர்பில் அதிருப்தி உருவாகியுள்ளது.

மறுபுறத்தில், உள்நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பது உள்ளிட்ட பல விடயங்களால் கோட்டா அரசு சிங்கள தேசிய வாத அமைப்புகளின் ஆதரவையும் இழந்து வருகின்றது. முக்கியமான, சில தேரர்கள் வெளிப்படையாகவே விமர்சனக் கணைகளைத் தொடுத்துவருகின்றனர். மறுபுறத்தில் கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் அரசியல் மயப்படுத்தப்பட்டு, அதிலும் அரசியல் விளையாட்டை ராஜபக்ச தரப்பு விளையாடுவதானது, அவர்களுக்கு வாக்களித்த மக்களையே முகஞ்சுழிக்க வைத்துள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ஐக்கிய மக்கள் சக்திக்குள் மோதல் எனவும், சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட தரப்பு வெளியேறவுள்ளது எனவும் ராஜபக்சக்களுக்கு சார்பான சமூகவலைத்தளங்கள் ஊடாக தகவல்கள் பரப்பட்டன. இதற்கு ஏதுவான சூழ்நிலைகளும் உருவாக்கப்பட்டன. சம்பிக்க ரணவக்கவால் '43' எனும் அரசியல் இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. சஜித்துக்கு எதிரானதே இந்த இயக்கம் எனவும், இது 2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தது எனவும் கூறப்பட்டது. அதாவது, சம்பிக்க ரணவக்கவே சஜித்துக்கு எதிராக சதி செய்கிறார் எனவும், ராஜிதவும் இதன் பின்னணியில் இருக்கின்றார் எனவும் தகவல் பரப்பட்டது.

சஜித் அணியில் இவ்விருவரும் முக்கிய புள்ளிகளாக இருக்கும் நிலையிலேயே அவர்கள் ஊடாக பிளவுக்கு பிள்ளையார் சுழி போடும் பொறி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்திக்குள் மோதல் இல்லை என அறிக்கையொன்றை விடுத்துவிட்டு அக்கட்சி அமைதியாக இருந்திருக்கலாம். அதனைவிடுத்து சஜித்துக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக 'பிரச்சினை' உள்ளதுதான் என்ற ஊகத்தை சஜித் அணியே மக்களுக்கு வழங்கியுள்ளது. அதுமட்டுமல்ல, சஜித் அணிக்குள் - உண்மையாகவே - ராஜபக்சக்களின் விசுவாசிகள் உள்ளனரா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. ஏனெனில், அவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றியதன் ஊடாக ராஜபக்சக்களின் பரப்புரை யுக்தி ஓரளவு வெற்றிபெற்றுள்ளது என்றே கூறவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவருக்கான வகிபாகத்தை நாடாளுமன்ற அரசியல் ஊடாக சஜித் பிரேமதாச சிறப்பாக முன்னெடுக்கின்றார். நாடாளுமன்றத் தரவுகளை எடுத்து பார்த்தால் அவரின் செயற்பாடுகள் மேல்மட்டத்தில் இருப்பதை அவதானிக்கலாம். உள்நாடு, வெளிநாடு, மேல்மட்டம் - கீழ்மட்டம் என பல்துறைகள் தொடர்பிலும் கேள்விக்கணைகளைத் தொடுத்து, பல விடயங்களை அம்பலப்படுத்தி அரசுக்கு கடும் நெருக்கடிகளை கொடுத்துவருகின்றார். ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே மேற்குலக ஆதரவை பெறமுடியும் எனக்கூறப்பட்டுவந்த நிலையில், அதையும் தானாக சிறப்பாக செய்து முடித்தார் சஜித். வெளிநாட்டு தூதுவர்கள் தம்மை வந்து சந்திக்கும் சூழ்நிலையை உருவாக்கினார். வெளிவிவகார பிரிவொன்றை அமைத்து, ஆலோசகர் ஒருவரையும் நியமித்தார்.

இதேவழியில் சஜித் சென்றால், 2024 ஜனாதிபதித் தேர்தலில் தலையிடி ஏற்படும் என்பதால் 'அவரை ஒடுக்குவதும், தற்போது அரசு மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை திசை திருப்புவதும் என' - ஒரே கல்லில் இரு மாங்காங்களை வீழ்த்தும் தந்திரமே 'ஐக்கிய மக்கள் சக்திக்குள் மோதல்' என்ற விடயத்தில் கையாளப்பட்டுள்ளது. ராஜபக்சக்களுக்கு சார்பான இலத்திரனியல் ஊடகமொன்று ஐக்கிய மக்கள் சக்தியின் உட்கட்சி விவகாரத்தை பிரதான செய்தியில் - அதுவும் பிரதான செய்தியாக தொடர்ச்சியாக - வெளியிட்டுவருவதன் ஊடாக இதன் பின்னணியில் நிகழ்ச்சி நிரல் உள்ளது என்பதை இலகுவில் ஊகித்துவிட முடியும்.

இயற்கை சீற்றம், கொரோனா தாண்டவம் என சமூகம், மக்கள் சார் பல பிரச்சினைகள் இருக்கும்போது, இந்த செய்திக்கு ஏன் இவ்வளவு முக்கியம் என்ற வினாவும் சமூகத்தின் முன் எழுந்துள்ளது.

### ஆட்சியை தக்கவைக்க திசைதிருப்பும் தந்திரம்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு அல்லது போட்டியை சமநிலையில் முடிப்பதற்கு அணியொன்று போராடும் பாணியில்தான் ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கு ராஜபக்ச தரப்பு தற்போது முயற்சித்துவருகின்றது.


முன்னர் இலகுவில் புலிப்பல்லவி பாடி, மக்களை திசைதிருப்பிடவிலாம். 21-4 தாக்குதலுக்கு பின்னர் சஹ்ரான் பல்லவி பாடப்பட்டது. இன்றளவிலும் இவ்விரு பல்லவிகளும் பாடப்படும் நிலையில், மேலும் சில யுக்திகள் கையாளப்படுகின்றன.

இலங்கை கடற்பரப்புக்குள் கப்பலொன்று தீப்பிடித்து எரிந்த சம்பவத்தின் பின்னணியில் பல மர்மங்கள் புதைந்துள்ளன.

இரு துறைமுகங்கள் நிராகரித்தும் இலங்கை எப்படி அனுமதித்தது? திடீர் தீ ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்கான உரிய வசதிகள் இல்லாத நிலையில் எவ்வாறு அனுமதி வழங்க முடியும் என்பது உட்பட பல சந்தேகங்கள் உள்ளன. இவ்விபத்தால் இலங்கையின் கடல்வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் 3 தசாப்தங்களுக்கு மேலாக இருக்கும் என சுழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

எனவே, இது பாரதூரமானதொரு சம்பவம் என்பதால் மக்கள் மத்தியில் எதிர்ப்புகள் கிளம்பின. ஊடகங்களின் செய்திகளையும் ஆக்கிரமித்துக்கொண்டன. இந்நிலையில்தான் அழகுக்கலை நிபுணர் சந்திமால் மற்றும் புயூமி ஹன்சமாலி விவகாரம் கையில் எடுக்கப்பட்டது. கப்பலோடு சேர்ந்து அந்தச்செய்தியும் கடலில் மூழ்க, தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறி புயூமி ஹன்சமாலி பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்திய விவகாரம் சூடுபிடித்தது. அந்த சூடு தணிவதற்குள் மஹிந்த ஓய்வுபெற்று, நாமல் பிரதமராகவுள்ளார் என்ற தகவலும் கசியவிடப்பட்டது.

இது ஆரம்பம் மட்டுமே. கொவிட் பிரச்சினை முடிந்து, மேலும் பல திசைதிருப்பும் நாடகங்கள் தரமாகவும், சிறப்பாகவும் இலங்கை அரசியல் களத்தில் அரங்கேறக் கூடும்.


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக
மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza
Shopping Centre, 49-55 McCrae Street,
Dandenong VIC 3175

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 48 ஜூன் 2021 தொ.பே:1800 960 162

# இரண்டாம் வதைப்படலம்



ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக – வார்த்தைக்கு வார்த்தை மனிதாபிமானத்தை ஜெபிப்பவர்களாக – உலக அமைதியின் மீட்பர்களாக – திருந்திவிட்ட மாமனிதர்களாக மிளிர்கின்ற ஆஸ்திரேலியா, இந்த தேசத்தின் பூர்வகுடிகளுக்கு செய்த கொடுங்காரியங்கள் என்ன என்பதை சாதாரணமாக எழுதி முடித்துவிட முடியாது. இன்று அமைதியை பேசுகின்ற எல்லா நாடுகளினதும் பின் வளவு குப்பைகள் போல, ஆஸ்திரேலியாவிலும் ஏராளம் சிதிலங்கள் கொட்டிக்கிடக்கின்றன என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இந்த காயங்களின் வலிகளும் வலிகளின் நீட்சியாக கிடக்கின்ற வரலாறும் ஒருபோதும் மறந்துவிட முடியாதது.

2008 ஆம் ஆண்டு, முன்னாள் பிரதமர் கெவின் ரட் அவர்கள் நாடாளுமன்றத்தின் ஊடாக இந்த நாட்டின் பூர்வ குடிகளிடம் மன்னிப்பு கேட்ட நிகழ்வானது, இந்த மண்ணுக்கு இழைக்கப்பட்ட ஒரு கோடி பாவங்களுக்காக செய்யப்பட்ட ஒரு துளி பரிகாரம். அவ்வளவே. மாறவும் மறக்கவும் முடியாத வலிகளாக தலைமுறை தலைமுறைகளாக இந்த தேசக் காற்றில் உலவுகின்ற ஏக்கங்கள் பல லட்சக்கணக் கானவை.

இவற்றின் பின்னணியில் கடந்த மே மாதம், விக்டோரியாவில் எழுந்த கூரான குரல் மிகவும் முக்கியமானது. அதாவது, உலக மன்னிப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்ட மே மாதம் 26 ஆம் திகதி, கிறீன் கட்சியின் விக்டோரிய செனட்டரும் – பூர்வகுடி வம்சாவளியை சேர்ந்தவருமான லிண்டா தோப் விடுத்த அறிக்கையில் – "ஆஸ்திரேலிய பூர்வகுடிகளின் குழந்தைகளை அவர்களின் பெற்றோரிடமிருந்து பிரித்து, எங்கள் வம்சத்தின் வளர்ச்சியை மிகத்திறம்பட அழித்தொழித்த ஆஸ்திரேலிய அரசுகளின் குற்றங்களுக்கு குறைந்தபட்ச பிராயச்சித்தமாக, பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், ஆஸ்திரேலிய அரசு இரண்டு லட்சம் டொலர்களை நட்ட ஈடாக வழங்கவேண்டும். அத்துடன், இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் இறுதி நிகழ்வுக்கு ஏழாயிரம் டொலர்கள் வழங்கவேண்டும்" – என்று தெரிவித் திருந்தார்.

இந்த நாட்டின் பூர்வ குடிகளின் வழிவந்தவர்கள், தங்களின் மூதாதையர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நட்ட ஈடு கோருவது இது முதல் தடவையல்ல. தாங்கள் இழந்த நிலங்களுக்கும், அதிலிருந்து உறிஞ்சிய வளங்களுக்கும், முன்னர் தமக்கு இழைத்த குற்றங் களுக்கும் தமக்கு நட்ட ஈடு தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துக்கொண்டுதானிருக்கிறார்கள்.

இன்றைய ஆஸ்திரேலியா தன்னை எவ்வளவுதான் பெருமைக்குரிய சக்தியாக முன்வைத்துக்கொண்டாலும் – நீதி தேவனாக தன்னை அலங்கரிக்க முற்பட்டாலும் – பின்னுக்கு நின்று இழுத்துவிழுத்தி, அதன் உண்மை உருவத்தை – மறைத்துநிற்கும் பொய்களை – அம்பலப் படுத்துபவர்களாக பூர்வகுடிகள் நின்றுகொண்டிருக் கிறார்கள்.

அவர்கள் பூர்வகுடிகளாக தம்மை முன்னிலைப் படுத்தினாலும், அவர்கள் நீதியின் பிரிதிநிதிகளாகத் தான் ஆஸ்திரேலிய அரசுக்கு சவாலாக தங்களை முன்னிறுத்திக்கொண்டு நிற்கிறார்கள்.

இந்த நாட்டின் பூர்வகுடிகளை அடியோடு அழித் தொழித்து, வெள்ளை ஆஸ்திரேலியாவை உருவாக்க வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட "தலைமுறை திருட்டு" எனப்படுகின்ற கொடிய நிகழ்வு, எவ்வளவு பெரும் பாதகமான செயல் என்பதையும், அதன் விளைவுகள் எவ்வாறெல்லாம் ஒரு இனத்தை நார் நாராக உரித்து வதைசெய்யக்கூடியது என்பதையும் அண்மையில் வெளியான ஒரு செய்தி மிகப்பெரிய அளவில் ஆதாரப்படுத்தியிருக்கிறது. ஆவணப்படுத்தியிருக் கிறது.

பாரதூரமான குற்றங்களை இழைத்து, அமெரிக்க சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த அபொறிஜினல் நபர் ஒருவர் ஆஸ்திரேலிய சிறைக்கு மாற்றப்படுவதற்கான நீண்ட போராட்டம் பலனளிக்காமல் ஜூன் இரண்டாம் திகதி சிறையில் காலமானார்.

ஒரு அபொறிஜினல் நபர் அமெரிக்க சிறையில் காலமாவதற்குரிய காரணமென்ன?

இந்த சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது? என்பவற்றை அறிவதற்கு இந்த செய்தியை சுரண்டிப்பார்த்தால், இறந்துபோன இந்த மனிதரின் பின்னணியில், எக்காலத்துக்கும் இறவாத வரலாறு ஒன்றுள்ளதை அறிந்துகொள்ளலாம்.

மெல்பேர்ன் பகுதியில் பிறந்து, பெற்றோரிடமிருந்து ஏழு வயதில் பிரிக்கப்பட்டு, வெள்ளைக்கார குடும்பமொன்று டன் சேர்க்கப்பட்டவரின் பெயர் ரசல் மோர். அபொறிஜினல் இனத்தின் பூர்வீகம் தொடர்ந்து இந்த மண்ணில் தழைக்கக்கூடாது என்பதற்காக பிரித்தெடுக்கப்பட்ட பல லட்சக்கணக்கானவர்களில் ஒருவர் ரசல் மோர். இவரை பிரித்து வளர்த்த குடும்பம் அமெரிக்கா சென்றபோது, அவர்களோடு ரசல் மோரும் அழைத்துச்செல்லப்பட்டார்.

அங்கு ஒர்லண்டா பகுதியில் 1991 இல் 57 வயது பெண்ணொருவரை கொள்ளையடித்து வன் புணர்வுக்கு உட்படுத்தி, படுகொலை செய்தார் என்ற குற்றத்தில் பரோல் வழங்கமுடியாத ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டார்.

ஆஸ்திரேலியாவை சேர்ந்த அபொறிஜினல் மக்களுக்கான சட்ட ஆலோசகர், இந்தக்கொலை சம்பவத்தை அறிந்து, ரசல் மோரை சந்திப்பதற்காக அமெரிக்கா சென்றார். அங்கு அவரை சிறையில் சந்தித்தார். ரசல் மோரின் பூர்வீகத்தை அறிந்துவந்து, ரசல் மோரின் உண்மையான குடும்பத்தை கண்டு பிடித்துக்கொண்டார்.

அவரது முயற்சியினால் ரசல் மோரின் உண்மையான தாயார் ஆஸ்திரேலியாவில் கண்டறியப்பட்டார். தனது மகனின் அடையாளத்தையோ, அவனது வசிப்பிடம் பற்றியோ, அவன் உயிருடன் இருக்கிறானோ என்பதுகூட அறிந்திராத ரசல் மோரின் தாய் அமெரிக்காவுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். ரசல் மோரினை சிறையில் சந்தித்தார்.

ஏழு வயதில் தன்னிடமிருந்து பலோத்காரமாக பிரிக்கப்பட்ட மகனை, ரசல் மோர் என்ற பெயரில் முதன் முதலாக சிறையில் சந்தித்தார் அந்தத் தாய். இருவரும் சிறையிலுள்ள விருந்தினர் அறையில் சந்தித்த அந்த நாளை தன்னால் மறக்கவே முடியாது என்று குறிப்பிட்டுள்ளார் ரசல் மோரின் அபொறிஜினல் சட்ட ஆலோசகர் ரிச்சேர்ட் பேர்க்.

எவ்வளவு ஒரு கொடிய நிகழ்வு. அவன் தன் உண்மையான தாயின் அரவணைப்பில் வளர்ந்திருந்தால், இப்படியொரு கொடியவனாக வளர்க்கப்பட்டிருப்பானா? கொலைகாரனாக சிறையில் இருந்திருப்பானா? வரலாற்றினால் தூரத்தில் துப்பிவிடப்பட்ட ஒரு அற்ப உயிரியாக உருக்குலைந்துபோன அவனது வாழ்க்கைக்கு, அந்த சிறையில் யாரை சபிப்பது?

இவை அனைத்தையும் கண்ட அந்த தாயின் இதயம் என்ன பாடுபட்டிருக்கும்? அவள் ரசல் மோரின் தாய் மாத்திரமல்ல, அவனைப்போல தங்கள் பிள்ளைகளை பறிகொடுத்து, அவர்களின் எந்த முகவரியுமில்லாமல் இழப்பின் அசரீரியை மாத்திரம் கேட்டபடி இறந்துபோன பல லட்சக்கணக்கான தாய்களின் பிரதிநிதி.

ரசல் மோரினை ஆஸ்திரேலிய சிறைக்கு மாற்றவேண்டும் என்று அவனது தாயார் அமெரிக்க அரசிடம் மன்றாடினார். "மாட்டோம்" என்றுரைத்த அமெரிக்க அரசிடம் கருணைகாட்டச்சொல்லி தொடர்ந்து போராடினார். இந்தக்கோரிக்கைக்கு ஆஸ்திரேலிய – விக்டோரிய அரசுகள் இசைந்துகொண்டபோதும், 2007 இல் ஒரு தடவையும் 2012 இல் இன்னொரு தடவையும் ரசல் மோரின் தாய் மேற்கொண்ட சட்ட விண்ணப்பங்களை அமெரிக்க நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

2017 இல் ரசல் மோரின் தாயார் இயற்கை எய்தினார். திரும்பவும் கிடைத்த தனது குழந்தையை, மீண்டும் அணைக்கமுடியாத கண்ணீரோடு, விளிம்பில் வைத்து வாழ்க்கை உதைத்து தள்ளிவிட, அந்தப் பெருந்துயரோடு காலமானார்.

ரசல் மோரும் அமெரிக்காவின் புளோரிடாவில் அமைந்துள்ள சிறையில் இயற்கை எய்தினார் என்று ஜூன் மாதம் இரண்டாம் திகதி அறிவிக்கப்பட்டது. இறக்கும்போது அவனுக்கு வயது 58.

ரசல் மோர் செய்த குற்றத்தை ஒரு போதும் நியாயப்படுத்த முடியாது. அது எந்த மண்ணிலும் தண்டனைக்குரியதுதான். ஆனால், அந்த குற்றத்தை நோக்கி அவனை அழைத்துச்சென்ற வளர்ப்புக்கும் அப்படியானதொரு மனநிலையை வழங்கிய வளர்பராயத்துக்கும் இந்த வரலாறு பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். ஏனெனில், அவன் ஏழு வயதிலிருந்தே ஒரு குற்றத்தின் குழந்தை.

இரண்டு வாரத்துக்கு கொரோனா முடக்கநிலை அறிவித்தவுடன், நாட்டு மக்களின் உளநிலை பாதிக்கப்படுகிறது, அவர்களுக்கு தற்கொலை எண்ணம் பெருகிறது, முதியவர்களை தனிமை உணர்வு கொன்று தின்கிறது என்று பதறுகின்ற ஆஸ்திரேலியா –

குற்றம் என்று தெரிந்துகொண்டே செய்த மா பாதகத்துக்கு வரலாற்றில் என்ன பதிலை எழுதி வைத்திருக்கிறது?

அதுபோல, இன்றைக்கும் இந்த மண்ணில் அகதிக் குடும்பங்களை பிரித்துவைத்து, அதற்கு நியாயக் குஞ்சரம்கட்டி அரசியல் காரணங்களை கூறுகின்ற வரலாற்றின் இரண்டாம் வதைப்படலத்தை என்னவென்று சொல்வது?

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# அகதி! வழிதேடி நீண்ட நடை

> பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலைக்காக ஏங்கி, சிறைசாலைக்குள் செத்து மடிந்தால்தான் விடுதலை என்ற எழுதப்படாத சட்டம் , இலங்கையில் மட்டும்தான் வாழ்கிறது. எனவேதான், பாதுகாப்பு தரப்பு மற்றும் ஆட்சிபீடத்தின் நிகழ்சிநிரலுக்கமைய செயற்படும் நீதித்துறை ஆகியவற்றின் பிடிக்குள் சிக்குவதை தவிர்ப்பதற்காகவும், இதர காரணங்களுக்காகவும் – உயிரைமட்டும் கையில் பிடித்துக்கொண்டு – பலர் புலம்பெயர்ந்தனர், பெயர்கின்றனர்.

தாயகத்தை போர் மேகங்கள் சூழ்ந்த காலந்தொட்டே தமிழர்களின் புலம்பெயர் படலமும் ஆரம்பமாகியது. தசாப்தங்கள் பல கடந்தும் அந்த படலம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அதற்கான சூழ்நிலையை இலங்கை அரசும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மெளிக்கப்பட்ட பின்னர்கூட, அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் - அடாவடிகள் - கைது வேட்டைகள் என்பன நிறுத்தப்படவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு அவ்வப்போது தாயகத்தில் 'புலிபூச்சாண்டி' காட்டப்படுவதும் வழமையாகிவிட்டது. கொரோனா கொன்று குவித்துக்கொண்டிருக்கும் காலத்தில்கூட பாதுகாப்பு தரப்பின் கைவரிசை தொடரவே செய்கின்றது.

மறுபுறத்தில், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலைக்காக ஏங்கி, சிறைசாலைக்குள் செத்து மடிந்தால்தான் விடுதலை என்ற எழுதப்படாத சட்டம் , இலங்கையில் மட்டும்தான் வாழ்கிறது. எனவேதான், பாதுகாப்பு தரப்பு மற்றும் ஆட்சிபீடத்தின் நிகழ்சிநிரலுக்கமைய செயற்படும் நீதித்துறை ஆகியவற்றின் பிடிக்குள் சிக்குவதை தவிர்ப்பதற்காகவும், இதர காரணங்களுக்காகவும் - உயிரைமட்டும் கையில் பிடித்துக்கொண்டு - பலர் புலம்பெயர்ந்தனர், பெயர்கின்றனர்.

புலம்பெயர்ந்த கையோடு அவர்களுக்கு புகலிடம் கிடைப்பதில்லை. பல வருடங்கள் வலி சுமந்து - சிறைகளில் வாடி - வாழ்ந்து - நெடுநாள் தவத்துக்கு பின்னரே, ஏதாவது ஒளிக்கீற்று பிறக்கின்றது. இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில், அகதி அந்தஸ்த்து வழங்கப்பட்டும், நீண்டகால தடுப்பு காவலில் வைக்கப்பட்டு - வாழ்நாளை கடத்திக்கொண்டிருக்கும் பலரை ஆஸ்திரேலிய தடுப்பு நிலையங்களில் காணலாம்.

அதுமட்டுமின்றி சமூகத்துடன் ,ணைக்கப்பட்டவர்களுள் பெரும்பாலானோருக்கும் ஆஸ்திரேலியா என்பது திறந்த வெளிச்சிறைச்சாலையாகவே காணப்படுகிறது. குறிப்பாக, அகதியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றவர்களுக்கான நிரந்தர விசாவை வழங்க மறுக்கிறது ஆஸி. அரசு. இவ்வாறு அனுமதி மறுக்கப்படுவதால், அவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேற - அவர்களின் குடும்பங்களுடன் இணைவதற்கான - அனுமதியும் மறுக்கப்படுகின்றது. இப்படி பல துயரங்களுக்கு மத்தியில்தான் அவர்களின் வாழ்வு நகர்ந்துகொண்டிருக்கின்றது.

ஆஸ்திரேலியாவின் ,த்தகைய சுறாவளி சட்டங்களுக்குள் சுமார் ஏழுவருடங்களாக மூன்று பெண் பிள்ளைகளுடன் எந்தொவொரு அடிப்படை விசாவும் வழங்கப்படாது, வேலை செய்ய அனுமதி - மருத்துவ வசதி எதுவும் வழங்கப்படாது ஒரு குடும்பம் 'பலரற்' என்ற ,டத்தில் அந்தரப்பட்டுக்கொண்டிருக்கிறது.

ஏழு ஆண்டுகளாக, தான் சுமந்துகொண்டிருக்கும் வலிகளை, ஆஸ்திரேலிய மக்களுக்கு தெரியப்படுத்த - உணர்த்த வேண்டும் என்பதற்காக, **13.45** கிலோ எடையை சுமந்து கொண்டு, **6.22** கிலோமீற்றர் வரை அகதிகள் மற்றும் அகதிக் கோரிக்கையாளர்களுக்கான அடையாள நடைபயணம் ஒன்றை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளார் நீலவண்ணன்.

ஐக்கிய நாடுகள் அமைப்பால் பிரகடனப்படுத்தப்பட்ட அகதிகள் வாரத்தின் இறுதி நாளான **20** ஆம் திகதி மதியம் **12.30** மணிக்கு **403** Wendouree Parade, Lake Wendouree VIC - **3350** என்ற இடத்திலிருந்து ,ந்த நடைப்பயணம் ஆரம்பமாகவிருக்கிறது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், அகதிகள் மற்றும் அகதிக்கோரிக்கையாளர்களுக்கான நடை பயணம் தொடர்பில் நீலவண்ணன், எதிரொலியுடன் தகவல்களை பகிர்ந்துகொண்டார்.

நடைபயணம் பற்றி தெளிவுபடுத்துவதற்கு முன்னர், தான் கடந்து வந்த அகதி வாழ்க்கை பற்றி அவர் விவரிக்க ஆரம்பித்தார்.

'நான் யாழ்ப்பாணம் வடமராட்சியை சேர்ந்தவன். யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்குண்டு, அதிலிருந்து மீண்டு, **2008** இல் நாட்டை விட்டு வெளியேறி, குடும்பத்தாருடன் மலேசியாவில் தஞ்சமடைந்தேன். அங்கு ஐக்கிய நாட்டுக்கான அகதிகள் அமைப்பில் அகதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தேன். நிரந்தர வாழ்வுக்கான வழி பிறக்கவில்லை. அகதியாக அவல வாழ்க்கை தொடர்ந்தது. எனவே, நிரந்தர வாழ்வைத்தேடி - கிடைக்கும் என்ற நம்பிக்கையில் - **2012** ஆகஸ்ட் மாதம் ஆஸ்திரேலியா நோக்கி வருவதற்கு படகேறினேன்.

'ஆஸி. அரசின் 'அகதிக்கான விசாரணைகள் துரித கதி' - என்ற நெறிப்படுத்தலின் கீழ் எனக்கான அகதி விசாரணையும் கிடுகிடுவெனவே இடம்பெற்றன. அவற்றுக்கான பதில்களும் ஒருவார காலத்துக்குள் வழங்கப்பட்டு, **2014** பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி அனைத்து விதமான விசா நடைமுறையும் முடிவுற்று, நிர்க்கதியான நிலைக்கு எனது குடும்பம் தள்ளப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை வேலை செய்வதற்கான அனுமதியும், மருத்துவத்துக்கான அனுமதியும் மறுக்கப்பட்டன.

'இதற்கிடையில், **2015** ஆம் ஆண்டளவில் எனக்கு குடிவரவுத்திணைக்களத்தால் ஒரு மின்னஞ்சல் வந்தது. அதில், என்னை தவிர எனது மனைவி - பிள்ளைகளுக்கு 5 வருட விசா வழங்கப்படுவதாகவும், அதற்கான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ,தனையடுத்து, 'பலரற்' சமூகத்தின் நிதிப்பங்களிப்பில் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தோம். சுமார் 3 மாதங்களாக அதற்கான பதில்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால், நான் குடிவரவுத்திணைக்களத்தை தொடர்புகொண்டு, விவரத்தை தெரிவித்து 'எப்போது விசா வழங்குவீர்கள்' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'அது தொழில்நுட்ப கோளாறு காரணமாக தவறுதலாக அனுப்பப்பட்டது' - என பதிலளித்தனர். பல எதிர்ப்பார்ப்புகளுக்கு மத்தியில் காத்திருந்த எமக்கு ,ந்த பதிலானது பேரிடி விழுந்ததுபோல் அமைந்தது' - என்றார்.

நீலவண்ணன் குடும்பத்தார் எவ்வளவு எதிர்ப்பார்ப்புடன் ,ருந்திருப்பர் என்பதை அவரின் கருத்துகள் உணர்த்தின. எம்மால் ஆறுதலை மட்டுமே கூறமுடிந்தது. கவலைக்கு மத்தியிலும் எம்முடன் மேலும் சில தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

'இவ்வாறு அதிர்ச்சியில் ,ருந்து மீளவில்லை. அதற்குள் நாட்டுக்கு திரும்பி செல்லுமாறு ஆயிரம் அழுத்தங்கள், வற்புறுத்தல்கள். இதனால் என் குடும்பத்தின் அவல நிலையை உணர்த்த 'பலரற்' சமூகத்தினர் Let Them Stay என்ற போராட்டத்தை நடத்தினர். அதன்பின்னர், எந்த தொல்லையும் இல்லை. அவ்வப்போது, குடிவரவு திணைக்களத்தை தொடர்பு கொண்டு 'எங்களுக்கு என்ன முடிவு' என்று கேட்பேன். அமைச்சரின் முடிவுக்காக காத்திருப்பதாக பதில் வழங்கப்படும். 'அமைச்சரின் முடிவு வரும்வரை தொடர்புகொள்ளாதீர்கள்' - என்று அழுத்தமான தொனியில் குடிவரவுத்திணைக்களத்தால் பதில் தரப்படும்.

'விசா மறுக்கப்பட்ட நாள்முதல் இன்றுவரை 'பலரற்' சமூகம்தான் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றது. வீட்டுவாடகை முதல் மின்கட்டணம், குடிதண்ணீர் வரைக்குமான கட்டணத்தை அச்சமூகமே செலுத்துகிறது. அத்துடன், மாதமாதம் நூறு டொலர்கள் வரையான கூப்பன் மற்றும் இருபது டொலர்கள் மட்டும் பணமாக அன்று முதல் வழங்கிவருகின்றது. அப்போது எனது பிள்ளைகள் சின்னவர்கள், இப்போது அவர்கள் வளர்ந்துவிட்டனர். அவர்களுக்கான தேவைகள் அதிகமாகிவிட்டன. பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்ற முடியாத ஒரு தந்தையாக, ,ந்த மண் என்னை நிர்க்கதியாக்கிவிட்டிருக்கிறது. நூறு டொலர் கூப்பன் மற்றும் ,ருபது டொலர் பணத்துடன் ஒரு குடும்பத்தின் தேவையை எவ்வாறு நிறைவேற்றுவது.?

'அகதிகள் வாரத்தின், ,றுதி நாளாகிய **20** ஆம் திகதியுடன் **2** ஆயிரத்து **691** நாட்களாக நாம் இந்த நாட்டில் தனித்துவிடப்பட்ட - அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட - நிலையில் வாழ்கிறோம். எமது ஐந்து பேரின் நாட்களையும் ஒருகிணைத்தால் **13** ஆயிரத்து **455** நாட்களாக அமையும். இத்தனை நாட்களாக நாம் சுமக்கும் வலிகளை **13** கிலோ **455** கிரமாக சுமந்து கொண்டு, நடந்து இந்நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவுள்ளேன்.

'அதேவேளை, என்னைபோன்று வலிகளை சுமந்து வாழும் மற்றைய அகதிகளின் வலிகளையும் தெரியப்படுத்துவதற்காக ஒவ்வொரு கிலோமீற்றர்களுக்கு இடையே மேலும் எடைகளை தூக்கி சுமக்க எத்தனித்துள்ளேன். இது ஆஸ்திரேலிய அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் நடவடிக்கை அல்ல. மாறாக, என் - எம் வலிகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாகவே இதனை நான் பயன்படுத்துகிறேன்.

'இங்கு வந்து சுமார் ஒன்பது ஆண்டுகள். ,ருந்தும் நிரந்தர வாழ்வு கிட்டவில்லை. அதற்கான போராட்டம் மட்டுமே முடிவின்றி தொடர்கின்றது' - என்ற ஆதங்கத்தோடு கூறிமுடித்தார். ■






# வெளிநாட்டிலிருந்து சிறிலங்கா செல்வோருக்கு...

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை இலங்கையில் கோரத்தாண்டவமாடிவருவதால் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பயணக்கட்டுப்பாடுகளை நீடிக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது அலை 90 வீதம் கட்டுக்குள் வந்திருந்த நிலையில், கட்டுப்பாடுகளை கட்டங்கட்டமாக தளர்த்தியிருந்தால் - சுகாதார மற்றும் பாதுகாப்பு இயந்திரம் முறையாக செயற்பட்டிருந்தால் - பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பின்பற்றியிருந்தால் - இன்று மரண பீதியுடன் வாழவேண்டிய அபாய நிலை உருவாகியிருக்காது என துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வைரஸ் தொற்று ஒருபுறம், மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை மறுபுறம். இடையில் பொருளாதார நெருக்கடிவேறு. இவற்றை உரியவகையில் முகாமை செய்யாவிடின் விளைவுகள் விபரீதமாகும். இதனால் ஆட்சீபீடமும் முழு வீச்சுடன் செயற்பட்டுவருகின்றது. புதுப்புது திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன. தடுப்பூசி திட்டமும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஜூன் முதலாம் திகதி முதல் இலங்கையிலுள்ள அனைத்து விமான நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இதன்படி இலங்கையர்களும்,இரட்டை பிரஜா உரிமை உடையவர்களும், சுற்றுலாப்பயணிகளும் நாட்டுக்குள் வரமுடியும். இது தொடர்பான சுகாதார வழிகாட்டல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் உலகளாவிய தொற்று என்பதாலும், அவ்வைரஸ் தொடர்பில் விஞ்ஞானிகளும், ஆய்வு நிறுவனங்களின் பிரதிநிதிகளும், உலக சுகாதார நிறுவன பிரதிநிதிகளும் ஆய்வுகளின் பின்னர் அவ்வப்போது புதுவிதமான தகவல்களை வெளியிடுகின்றனர்.சில வேளை புதுவகையான நடைமுறைகளை பின்பற்றுமாறு வலியுறுத்தப்படுகின்றது.

எனவே, உலக மற்றும் உள்நாட்டு நிலைவரங்களைக் கருத்திற்கொண்டு இலங்கை வருபவர்களுக்கான சுகாதார வழிகாட்டல்களிலும் அவ்வப்போது சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.இறுதியாக ஜூன் ஆரம்பம் முதல் புதிய சில நடைமுறைகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன. ஜூன் 30 ஆம் திகதிவரை அவை அமுலில் இருக்கும்.

இதன்படி இலங்கை வரும் இலங்கை பிரஜைகள், இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் பயணிப்பதற்கு 96 மணி நேரத்துக்குள் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டிருக்க வேண்டும். பரிசோதனை முடிவு 'நெகடிவ்' ஆக இருந்தால் மட்டுமே அவர்கள் வரமுடியும். இலங்கை பிரஜையாக இருப்பின் 48 மணிநேரத்துக்கு முன்னர் 'என்டிஜன்ட்' பரிசோதனை செய்து அந்த முடிவைகூட காண்பிக்க முடியும். பரிசோதனை அறிக்கை முடிவு ஆங்கில மொழியில் இருத்தல் அவசியம். ஒன்றுக்கு மேற்பட்ட மூலப்பிரதிகள் வைத்திருப்பது சிறப்பு. தான் விமானம் ஏறும் இடத்தில் ஒரு பிரதியையும் இலங்கை வந்த பின்னர் விமான நிலையத்திலுள்ள மருத்துவ அதிகாரியிடம் மற்றைய பிரதியையும் கையளிக்ககூடியதாக இருக்கும்.

சில விமான நிறுவனங்கள் 72 மணிநேரத்துக்குள் எடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனை அறிக்கையையே கோருகின்றன. ஆனால் பிசிஆர் பரிசோதனை முடிவுகள் வருவதில் தாமதம் ஏற்படுவதாக கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே 72 மணிநேரமாக இருந்த வரையறை 96 மணி நேரமாக்கப்பட்டுள்ளது என சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்று இல்லை என்ற 'நெகடிவ்' அறிக்கையுடன் விமானம் ஏறுபவர்கள் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். அத்துடன், இலங்கை விமான நிலையத்தை வந்தடைந்ததும் சுகாதார அறிவித்தல் படிவத்தினை முறையாக பூர்த்தி செய்து உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

குறிப்பாக இந்தியா, தென்னாபிரிக்கா, வியட்னாம் மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் இருந்து வரும் இலங்கையர்கள், இரட்டை பிரஜா உரிமை உடையவர்கள் கொவிட் - 19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை ஏற்றியிருந்தாலும், பிசிஆர் பரிசோதனை அறிக்கை நெகடிவ் ஆக இருந்தாலும் அவர்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்ய அனுமதி இல்லை. ஹோட்டல் அல்லது தனிமைப்படுத்தல் நிலையத்திலேயே தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்வது கட்டாயம். .

அதேபோல கொவிட் - 19 தடுப்புக்கான பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசியை முறையாக ஏற்றிக்கொண்டு, தடுப்பூசி ஏற்றப்பட்ட நாளிலிருந்து இரு வாரங்களுக்கு பின்னர் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இலங்கை வருபவர்களுக்கு, இலங்கையில் வைத்து மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனை முடிவு "நெகடிவ்" ஆக இருந்தால் அவர்கள் வீடு செல்ல முடியும். ஆனால் வீட்டில் கட்டாயம் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் அவசியம்.

தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் அதற்கான சான்றிதழ் அல்லது அட்டையின் மூலப்பிரதியை வைத்திருக்க வேண்டும்.

அதேவேளை, ஆங்கில மொழி அல்லாத பிற மொழிகளில் இருந்தால் மொழிப்பெயர்ப்பு பிரதியை விமான நிலையத்திலுள்ள சுகாதார அதிகாரியிடம் கையளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலாவது பிரிஆர் பரிசோதனை முடிவு வெளிவரும்வரை (24 மணிநேரத்துக்குள்) ஹோட்டல் அல்லது தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருத்தல் வேண்டும்.

பிசிஆர் முடிவு நெகடிவ் ஆக இருந்தால் அது தொடர்பான தகவலுடன் வெளியேறும் ஆவணம் வழங்கப்படும். ஹோட்டல் அல்லது தனிமைப்படுத்தல் நிலையத்தால் அது தொடர்பான தகவல் சுகாதார அமைச்சுக்கு அனுப்படும்.

வீடு செல்வதற்கான ஏற்பாடுகளை பயணிகளே மேற்கொள்ள வேண்டும். பொது போக்குவரத்தை பயன்படுத்த முடியாது. வீடு செல்லும்போது சுகாதார நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்படவேண்டும்.

வீடு சென்ற பின்னர் பொது மருத்துவ அதிகாரிக்கு தகவல் வழங்க வேண்டும். தொலைபேசி அல்லது மின்னஞ்சல் ஊடாக தகவல்களை வழங்கலாம்.

பொது சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகரின் கண்காணிப்பின்கீழ் 14 நாட்கள் வீட்டில் கட்டாயம் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். 14 நாட்களுக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனை நெகடிவ் எனில் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

"தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை ஏற்றியவர்களுக்குக் கூட கொவிட் - 19 தொற்றிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனவே, வீட்டில் உரிய வசதி இல்லாவிடின், ஹோட்டலில் அல்லது தனிமைப்படுத்தல் நிலையத்தில் 14 நாட்கள் பாதுகாப்பாக இருப்பதே சிறந்தது." - என சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வெளிநாட்டில் இருந்தவாறே ஹோட்டலுக்கான ஒதுக்கீட்டை முன்கூட்டியே மேற்கொள்ள முடியும். தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு செல்வதாக இருந்தால் விமான நிலையத்திலுள்ள இராணுவத்தின் உதவியைப் பெற்று செல்ல முடியும்.

தனிமைப்படுத்தலில் இருக்கும் காலத்தில் ஏதேனும் நோய் அறிகுறிகள் இருந்தால் அது தொடர்பில் சுகாதார தரப்புக்கு தெரியப்படுத்த வேண்டும். பிசிஆர் பரிசோதனை முடிவு "பொசிடிவ்" எனில் சிகிச்சை நிலையத்தில் உரிய சிகிச்சை வழங்கப்படும்.

அதேவேளை, தடுப்பூசி பெற்றுக்கொள்ளலாமல், பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி அளவை பூர்த்தி செய்யாமல், தடுப்பூசி பெற்ற பின்னர் இரண்டு வாரங்கள் பூர்த்தியாகாமல் இலங்கை வரும் இலங்கை பிரஜைகள் மற்றும் இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கு ஏற்கனவே வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இதன்படி இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதல் பிசிஆர் பரிசோதனையின் பின்னர் அவர்கள் தனிமைப்படுத்தல் ஹோட்டல் அல்லது நிலையத்துக்கு அனுப்படுவர். அதன்பின்னர் 7 ஆவது நாளில் மீண்டும் பிசிஆர் பரிசோதனை நடத்தப்படும். முடிவு நெகடிவ் என்றால் வீடு சென்று, அங்கு 7 நாட்கள் கட்டாய சுய தனிமையில் இருக்க வேண்டும். தற்போது 14 நாட்களுக்கு பின்னரே பரிசோதனை முடிவு நெகடிவ் என்றால் அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.


அதேவேளை, 'உயிர் குமிழி (Bio Bubble)' திட்டத்துக்கமைய இலங்கைவரும் முக்கியமான இராஜதந்திரிகளுக்கு மேற்படி நடைமுறை பொருந்தாது.

இலங்கை வரும் 2 வயதுக்கும் குறைவான குழந்தைகளுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படாது. 2 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு இலங்கை வந்த பின்னர் மேற்கொள்ளப்படும். 2 வயதுக்கும் குறைவான குழந்தைகளுடன் நாட்டுக்கு வந்தவர்களுக்கு தொற்றெனில் அக்குழந்தையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

உலக மற்றும் இலங்கையின் நிலைவரத்துக்கமைய நடைமுறைகள் அவ்வப்போது மாற்றப்படுகின்றன. எனவே, எதிர்காலத்திலும் மாற்றங்கள் இடம்பெறக்கூடும்.

# திரைக்கு வெளியே கேட்கும் ஓலம்

## பொய்யா விளக்கு
## The Lamp of Truth



இறுதிப்போரில் குறுகிய நிலப்பரப்பான முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடுக்கிவிடப்பட்ட மக்கள் மீது இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் பாதிப்புக்கள் குறித்த தகவல்களை அன்றைய காலப்பகுதியில் பெறுவதென்பது மிகவும் சவாலான விடயம். எனினும், அங்கு இடம்பெறும் படுகொலைகள், காயமடைந்தவர்கள் மற்றும் மருந்தின்றிய மக்களின் சாவுகள் தொடர்பில் உனடியாக தகவல்களை ஊடகங்களுக்கும் சர்வதேசத்துக்கும் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் அப்போது அங்கு கடமையாற்றிய முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரிகளான வரதராஜா மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோரே.அக்காலப்பகுதியில் பல செய்திகள் அவர்களை மேற்கோள்காட்டியே வெளிவந்திருந்தன.

இலங்கை அரச படைகளின் நச்சுக்கணைகள் தொண்டைவரை இறங்கிவிடப்பட்ட நிலையிலும் மக்களுக்கான மருத்துவ சேவையற்றியவர்களில் ஒருவர்தான் முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் வைத்திய அதிகாரி துரைராஜா வரதராஜா. மருத்துவராக தான் எதிர்கொண்ட சம்பவங்கள் மற்றும் கட்டவிழுத்துவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தை திரைவடிவமாக்க உருவாக்கப்பட்டது தான் பொய்யா விளக்கு திரைப்படம்.

இத்திரைப்படத்தை தனேஸ் கோபால் இயக்க, வெண்சங்கு கலைக்கூடம் தயாரித்துள்ளது. அத்துடன், களத்தில் மருத்துவராகவே களமாடிய முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி துரைராஜா வரதராஜா இத்திரைப்படத்தில் பிரதான பாத்திரமேற்றிருக்கிறார்.

பொய்யா விளக்கு திரைப்படத்தின் பிரதான பாத்திரமேற்ற முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி வரதராஜாவுடன் எதிரொலி நேர்காணலை மேற்கொண்டது. குறித்த நேர்காணல் வருமாறு,

**கேள்வி - யார் இந்த வரதராஜா என்பதை முதலில் சொல்லுங்கள்.?**

பதில் - எனது சொந்த இடம் திருகோணமலை தம்பலகாமம். யுத்தம் ஆரம்பித்த காலம் முதலே அதிகமான பாதிப்புகளை சந்தித்த ஒரு மாகாணம்தான் கிழக்கு. சிறுவயது முதலே தம்பலகாமம் - கிண்ணியா, கிண்ணியா - தம்பலகாமம் என மாறி மாறி இடப்பெயர்வுகளை சந்தித்து வளர்ந்தவன். 1986 ஆம் ஆண்டு யுத்தம் இடம்பெற்றது, அந்த யுத்தத்தின்போது தம்பலகாமத்திலிருந்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வரை இடம் பெயர்ந்து, இந்தியா அமைதிப்படை என்ற போர்வையில் வரும் வரை சொந்த நிலம் மீளவில்லை.

அதன்பின்னர் 1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்த பின்னர் புதுக்குடியிருப்பே தஞ்சமானது. அங்குதான் உயர்தரம்பயின்று மருத்துவ பீடத்துக்குத் தெரிவானேன்.

**கேள்வி: அந்த காலப்பகுதியில் அதிகமானோர் வெளிநாடுகளுக்கு தப்பி சென்றுவிட்டனரே..?**

பதில்-உண்மைதான்.யுத்தம்ஆரம்பித்ததிலிருந்தே எமது பிரதேசத்துக்கு பொருளாதார தடை நடைமுறையிலிருந்தது. அரச படைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் சிக்கும் மக்களுக்கு மருந்துகளுக்கும்தட்டுப்பாடு. மருத்துவம் பார்க்கும் மருத்துவரவர்களுக்கும் தட்டுப்பாடு. இந்த அவலங்கள் தான் மருத்துவராக வேண்டும் என்ற எண்ணத்தை எனக்குள் விதைத்தது. இந்நிலையை வைத்திய பயிற்சிக் காலங்களில் அதிகமாக பார்க்கக் கூடியாதாக இருந்தது. இப்படியிருக்கும் போது எப்படி வெளிநாட்டுக்கு தப்பிசெல்வது.

> வெளியுலகத்துக்கு தகவல் வழங்குவதற்கான பொறுப்பு எங்களிடம் தான் இருந்தது. மக்களின் உயிரிழப்புக்கள் காயமடைந்தோர் பட்டியல்களை நாமே வழங்க வேண்டிய நிலையேற்பட்டது. ஊடகங்களுக்கு தகவல் அளிக்க வேண்டாம் என்று அரச உயர்மட்டத்தவர்களால் அழுத்தம் தரப்பட்டது. இது போன்ற விடயங்களே சாதாரண வைத்தியத் துறைக்கும் போர் திண்ணும் நிலத்தில் வைத்திய துறைக்கம் உள்ள வேறுபாடு. அவற்றை நீங்கள் பொய்யா விளக்கு திரைப்படத்தில் பார்க்கலாம்.

**கேள்வி: சாதரண சூழ்நிலையில் வைத்தியராக கடைமை புரிவதற்கும் யுத்தம் மட்டுமே நடந்துகொண்டிருக்கும் மண்ணில் வைத்தியராக கடைமை புரிவது என்பது எவ்வளவு கடின மானது..?**

பதில்: குருநாகல் மாவட்ட வைத்தியசாலையில்தான் எனது வைத்தியருக்கான பயிற்சி. சத்திர சிகிச்சை பிரிவு, சிறுவர்களுக்கான சிகிச்சை பிரிவு மற்றும் அதிதீவிர பிரிவில் தான் நான் பயிற்சி பெற்றேன். இது தான் எனக்கு பிற்காலத்தில் மக்களின் உயிர்களை காப்பாற்ற போகுது என்று அன்று தெரிந்திருக்கவில்லை.

பயிற்சியின் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் சுகாதார பிரிவு வைத்தியராக கடைமை புரிந்தேன். அங்கு சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது மற்றும் தொற்றுத்தடுப்பு வைத்தியராகவே கடைமை புரிந்தேன். நீங்கள் சொல்வதை போல இவை எதுவும் சவாலனாவை இல்லை தான்.

இவ்வாறிருக்கும்போதுதான் 2006 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்தது. திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் , சம்பூர், சேனையூர், ஈச்சிலம்பற்று ஆகிய பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இந்த பிரதேசங்களில் எந்த அரச வைத்தியரும் இல்லை. இந்த பகுதி மீது இராணுவத்தினர் பெரும் தாக்குதலை நடத்திகொண்டிருந்த போது காயப்படும் மக்களை விடுதலைப்புலிகளின் மருத்துவ பிரிவு ஆரம்பகட்ட சிகிச்சைகளை வழங்கி ஈச்சிலம்பற்று வைத்தியசாலைக்கு அனுப்பி அதனுடாக மட்டக்களப்பு வைத்திசாலைக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் காயமடைந்த மக்களை அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் அனுமதிப்பதற்கு இலங்கை அரசு விரும்பவில்லை. ஏனெனில் தாம் புலிகளின் இலக்குகளை தாக்கி அழிக்கின்றோம் என்று உலகத்துக்கு தெரிவித்துக்கொண்டிருந்தது. அவ்வாறிருக்கும்போது காயமடைந்த மக்களை அரச வைத்திய சாலைக்கு அனுமதித்தால் மக்கள் மீது தாக்குதல் நடத்துவது வெளிப்படையாக விடும்.

அதனால் அரச கட்டுப்பாட்டு வைத்தியசாலைகளுக்கு கொண்டுவருவதை விரும்பிருக்கவில்லை. இதனையடுத்து ஈச்சிலம்பற்று வைத்திய சாலைக்கு அரச வைத்தியர் ஒருவரை நியமிக்க முடிவெடுக்கப்பட்டது. ஆனாலும் எந்தொரு வைத்தியர்களும் அதற்கு தயாராக இருக்கவில்லை. இதனை அறிந்த நான், விண்ணப்பித்தேன். அதற்கு பின்னர் நான் ஈச்சிலம்பற்று வைத்திய சாலைக்கு போன பின்னர் மாவிலாறு போர் ஆரம்பத்தது. இதற்கு பின்னர் ஐந்தாறு வைத்தியர்கள் செய்ய வேண்டிய வேலையை தனியொருவனாக செய்யவேண்டியதாயிற்று. அத்துடன் அப்பிரதேச மக்களும் எம்மோடு இணைந்து வேலை செய்வர். ஊழியர்களும் இரவுபகல் பாரது வேலை செய்வர். அதனால் தான் பூரணமாக சேவை செய்ய கூடியதாக இருந்தது.

யுத்தத்தில் புலிகளிடம் வாகரை மட்டும் எஞ்சியிருக்க, ஈச்சிலம்பற்று வைத்தியசாலை அரச படைகளால் இலக்கு வைக்கப்பட்டபோகிறது என தெரியவந்தது. அக்கணமே செஞ்சிலுவை சங்கம் மற்றும் இதர சர்வதேச அமைப்புகளின் உதவியோடு அங்கிருந்த மக்களோடு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்தடைந்தோம்.

ஆனாலும் இலங்கை புலனாய்வு பிரிவினர் மற்றும் ஒட்டுக்குழுக்களின் தொடர்சியான அணுகுமுறை என்னை திருகோணமலையில் வாழ அனுமதிக்கவில்லை. அதன்பின்னர் வன்னிக்கு சென்று விட்டேன். அங்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பணியில் இணைத்துக்கொண்டேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியர்களும் தட்டுப்பாடு, மருந்துகளுக்கும் தட்டுப்பாடு. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாவட்ட வைத்திய சேவைப் பாணிபாளராகவும் நியமிக்கப்பட்டேன்.




மக்கள் இடம்பெயரும்போது மக்களுடன் நாங்களும் இடம் பெயர்தோம். யுத்தகளத்தில் குண்டுகளுக்கு தெரியாது எது வைத்தியசாலை எது மக்கள் குடியிருப்பு என்பது.

குண்டுகள் வீழ்ந்தாலும் நாம் பதுங்கு குழிகளுக்குள் செல்ல முடியாது. ஏனெனில் ஒரு காயப்பட்ட ஒருவருக்கு மருத்துவம் செய்வதை இடைநிறுத்தி பதுங்கு குழிகளுக்குள் சென்று பதுங்க முடியாது.

அத்துடன், வெளியுலகத்துக்கு தகவல் வழங்குவதற்கான பொறுப்பு எங்களிடம் தான் இருந்தது. மக்களின் உயிரிழப்புக்கள் காயமடைந்தோர் பட்டியல்களை நாமே வழங்க வேண்டிய நிலையேற்பட்டது. ஊடகங்களுக்கு தகவல் அளிக்க வேண்டாம் என்று அரச உயர் மட்டத்தவர்களால் அழுத்தம் தரப்பட்டது. இது போன்ற விடயங்களே சாதாரண வைத்தியத் துறைக்கும் போர் திண்ணும் நிலத்தில் வைத்திய துறைக்கும் உள்ள வேறுபாடு. அவற்றை நீங்கள் பொய்யா விளக்கு திரைப்படத்தில் பார்க்கலாம்.

**கேள்வி: சரி, பொய்யா விளக்கு திரைப்படம் ஏன்..?**

பதில்: நான் அமெரிக்கா வந்த பின்னர் போர்குற்றம் குறித்து ஜெனிவாவில் சாட்சியமளித்தவன். பல இடங்களில் யுத்த அவலத்தின் கதைகளை கதைத்தபோது இவற்றை புத்தகமாக கொண்டு வாருங்கள் என அனைவரும் கோரினார்கள். ஆனால் யுத்தத்தில் கையில் காயப்பட்டிருந்தேன். அதனால் எழுத முடியவில்லை. யாருடைய உதவியிலாவது எழுதலாம் என முயற்சித்தேன். அது முடியவில்லை. இதற்கிடையில் 2018 ஆம் ஆண்டு கனடாவில் நடந்த "" தை மரபு திங்கள்"" நிகழ்வில் பேச்சாளராக அழைத்திருந்திருந்தனர். அங்கு உரையாற்றிய உரையைக் கேட்ட இத்திரைப்படத்தின் இயக்குனர், இதனை நாம் திரைப்படமாக கொண்டு வரவேண்டும் என வலியுறுத்திக்கொண்டிருந்தார்.

இத்திரைப்படத்தை இயக்குவதற்கு முன்னர் இரு குறும் படங்களை எடுத்து வெளியிட்டவர் தான் இயக்குனர் தனேஸ் கோபால் ஆரம்பத்தில் இதனை திரைப்படமாக கொண்டு வர முயற்சிக்கவில்லை. ஓர் ஆவணப்படமாக இயக்கத்தான் முயற்சித்தோம். 2018 ஆம் ஆண்டு முதல் கதை எழுத ஆரம்த்திருந்தோம்.

**கேள்வி: ஆவணப்படம் எப்படி திரைப் படமானது..?**

புதில் : தனேஸின் ஆர்வமும் வெண்சங்கு கலைக்கூடத்தின் அர்பணிப்பும் தான் திரைப்படமாக மாற்றம் அடைந்தது.

**கேள்வி: இத்திரைப்படம் எங்கே எங்கே படமாக்கப்பட்டது..?**

புதில் : தற்போதைய வாழ்க்கை அமெரிக்காவில் படமாக்கப்பட்டது.



தாயகத்தில் எடுக்கப்பட வேண்டிய பகுதிகளை தமிழ் நாட்டில் வைத்தே எடுத்திருந்தோம். இத்திரைப்படத்தின் படப்பிடிப்பாளர் கிருஸ்ணா என்பவர் தான் தமிழ்நாட்டு திரைப்பட பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு படப்பிடிப்புக்கான ஒழுங்குகளை செய்திருந்தார்.

**கேள்வி: முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற சம்பவங்களை மட்டுமா வைத்து இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது..?**

பதில்: இல்லை. முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது முள்ளிவாய்காலில் கொல்லப்பட்டவர்களுக்கானது அல்ல. அது இனப்படுகொலைக்கான அடையாளச் சொல். அதுபோன்றே இத்திரைப்படத்திலும் பல காட்சிகள் எங்கு நடைபெற்றது என சொல்லப்படவில்லை. யுத்தகாலத்தில் நாம் எதிர்கொண்டவற்றை ஒரு கோர்வையாக உண்மை சம்பவங்களை உள்ளடக்கி வெளியிட்டிருக்கிறோம்.

**கேள்வி: நீங்கள் ஒரு வைத்தியர். நீங்கள் எப்படி நடிக்க ஆமோதித்தீர்கள்.?**

பதில்: ஒரு திரைப்படத்தை உருவக்கும் போது பலரது கருத்துக்கள் கோரப்படும். எனக்கு பதிலாக பலரை நடிக்க வைக்க யோசனை வழங்கப்பட்டது. என்னையே பிரதான பாத்திரத்தை ஏற்க யோசனையும் முன்வைக்கப்பட்டது. இதில் உண்மையும் இருக்கிறது. நானே அனுப்பவித்தேன். எனது ஆதங்கத்தை என்னால் தான் உணர்வு பூர்வமாக கொண்டுவரமுடியும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. அதனாலேயே நான் சம்மதித்தேன்.

**கேள்வி : இத்திரைப்படத்தில் சக நடிகர்கள் குறித்து சொல்லுங்களேன்..?**

பதில்: இத்திரைப்படத்தில் இரண்டு மூன்று பேர்கள் தான், நாடகங்களில் நடிப்பவர்கள். மற்றயவர்கள் அனைவருமே புதியவர்கள்தான்.

**கேள்வி: ஈழத்தமிழர்கள் குறும்படம் எடுப்பதற்கே பணத்துக்கு திண்டாட வேண்டியுள்ளது. பொய்யா விளக்கு அப்படி சிக்கல் ஏதும் இல்லையோ..?**

பதில்: பண நெருக்கடி பெரும் பிரச்சினைதான். நான் நேரடியாக பலரை தொடர்பு கொண்டேன். மறுப்புமட்டும்தான் தெரிவித்தனர். வெண்சங்கு கலைக்கூடத்தின் நண்பர்கள் பலரின் பங்களிப்புதன் இத்திரைப்படத்துக்கு கைகொடுத்தது.

**கேள்வி: இத்திரைப்படத்தில் விடுபட்டவை என ஏதாவது உள்ளனவா?**

பதில்: இறுதி யுத்தத்த வளையத்தில் சுமார் 3 வருடங்கள் வேலை செய்துள்ளேன். அங்கு நடந்தவை ஒவ்வொரு நாள் சம்பவமும் ஒவ்வொரு படமாகும். பல சம்பவங்கள் பணப்பற்றக்குறையால் விடுபட்டுள்ளனதான்.

**கேள்வி: இத்திரைப்படத்தை எங்கு பார்வையிடலாம்? இத்திரைப்படத்தை வெளியிடுவதில் எதிர்கொண்ட பிரச்சினைகள்?**

பதில்: அமெசன் பிரிமியரில் பார்வையிடலாம். அது நீங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்வதன் மூலமே பார்வையிடலாம். இதேவேளை ஈழத்தை சேர்ந்த பல ஊடகங்கள் வெளிநாடுகளிலிருந்து செயற்படுகின்றன. அவ்வாறான ஊடாகங்களை தொடர்பு கொண்டு பேசியிருந்தேன், இத்திரைப்படம் குறித்து செய்தி வெளியிடுவதற்கு பணம் கேட்டார்கள். தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் ஒரு படம் குறித்து விமர்சனம் வெளியிட இவர்கள் பணம் கேட்பார்களா இத்திரைப்படத்தின் ஊடாக நாங்கள் பணம் சம்பதிப்போமா இல்லை.

**கேள்வி: இறுதியாக மக்களுக்கு என்ன சொல்லபோறீர்கள்.?**

பதில்: எங்களுடைய இனம் திட்டமிட்டு இனவழிப்பு செய்யப்பட்டது. இந்த இனவழிப்பு குறித்து அடுத்த சந்ததிகளுக்கு ஆவணப்படங்களாகவோ அல்லது புத்தகங்களாகவோ கடத்தப்பட வேண்டும். அத்துடன் முடிந்தளவுக்கு எமது கதைகளை திரிவுபடுத்தாமல் அடுத்த சந்ததிகளிடம் கொண்டு செல்ல வேண்டும். இதன் ஊடாக திட்டமிட்ட இனவழிப்பில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்துடன் தாயகத்தில் இருக்கும் மக்களுக்கான நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை நாம் ஒன்றினைந்து செயற்பட வேண்டும்.




# கோமாளி அரசின் தடுப்பூசி தர்பார்

● அ.முத்துக்கிருஷ்ணன்

கொரோனா தொற்று உலகையே ஒரு புதிய அனுபவத்திற்கு ஆட்படுத்திவருகிறது. மக்களை இந்த தொற்றிலிருந்து எப்படி காப்பாற்றுவது, அடுத்துவரும் அலைகளை எவ்வாறு தடுத்து நிறுத்துவது, மருத்துவ கட்டமைப்புகளை எவ்வாறு மேம்படுத்துவது, நசிந்து கிடக்கும் பொருளாதாரத்தை எப்படி மீட்பது என ஓராயிரம் சவால்களை உலகெங்கிலும் உள்ள அரசுகள் எதிர்கொண்டு வருகின்றன. ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் தடுப்பூசிகளை போட்டு மக்களை காப்பற்றுவதே உலக அரசுகளின் முதல் கடமையாக உள்ளது.

கொரோனாவுக்கான தடுப்பூசி ஆய்வில் இருக்கும்போதே உலகெங்கிலும் உள்ள அரசுகள் அதை கொள்முதல் செய்ய களத்தில் இறங்கின. Pfizer நிறுவனத்துக்கு நிதி உதவி அளித்து அமெரிக்க அரசு முதல் கட்டமாக ஜூலை 2020லேயே 10 கோடி தடுப்பூசிகளுக்கு ஓடர் கொடுத்தது. அத்துடன் நின்றுவிடாது, மேலும் 50 கோடி தடுப்பூசிகளுக்கான ஒப்பந்தங்களை செய்துகொண்டது. அமெரிக்காவைப் போலவே பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியனின் பல தேசங்கள் தங்களின் தேவைகளை உறுதிப்படுத்திக் கொண்டு நிறுவனங்களிடம் முன்னதாகவே ஓடர் கொடுத்தன.

இந்தியா முதல் அலையிலேயே திக்குமுக்காடிப் போனது, இருந்தும் அந்த அலை ஓய்ந்த பின் மெல்ல தளர்வுகள் வந்து நடைமுறை வாழ்க்கை முழுவீச்சில் அமுலுக்கு வந்தது. இரண்டாம் அலை உலகை பதம்பார்க்க கிளம்பிவிட்டது. ஆனால், அவற்றைக் கணக்கில் எடுக்காமல் இந்தியாவோ, கும்பமேளா முதல் லட்சக்கணக்கானவர்களை கொண்டு தேர்தல் பிரசாரங்கள் என முதல் அலையை போலவே அதிகபட்ச மெத்தனத்தில் இருந்தது.

இந்த மெத்தனப்போக்கு இந்தியாவில் நாளுக்குநாள் கொரோனாவின் பாதிப்பு உச்சம் பெற காரணமாக இருந்தது. கொரோனாவால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் இந்தியாவில் 4 ஆயிரத்தை தொட்டது. ஆனால், இந்த பரவலைத்தடுக்கவும், உயிரிழப்பில் இருந்து மக்களைக் காக்கும் ஒரே வழிமுறையான தடுப்பூசி இந்தியாவில் போதிய அளவில் இல்லை. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் கடந்த ஆண்டு இறுதியில் தங்கள் மக்களுக்கு தடுப்பூசி போடும் வேலைகளைத் தொடங்கின.

இந்தியாவில் இந்தியர்களே உருவாக்கிய தடுப்பூசி என 'பாரத் பயோடெக்' நிறுவனமும் கோவாக்ஸின் தடுப்பூசியை வெற்றிகரமாக அறிவித்தது, தங்கள் தடுப்பூசி தயாரிப்பை தொடங்கினார்கள். AstraZeneca vd;fpw Sweedish – British நிறுவனம் 'கோவிசீல்ட்' தடுப்பூசியை புனேவில் உள்ள சீரம் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியா நிறுவனத்தில் தடுப்பூசியை தயாரிக்கத் தொடங்கியது.

இந்திய அரசு தடுப்பூசி தயாரிப்புக்காக சீரம் இன்ஸ்டிட்யூட்டிற்கோ, பாரத் பயோடெக் நிறுவனத்திற்கோ பெரிய அளவில் நிதியுதவி அளிக்கவில்லை என்பதோடு, பெரிய அளவில் வாங்குவதற்கான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவில்லை. சீரம் இன்ஸ்டிட்யூட் ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி, அவர்கள் ஒரு தடுப்பூசி 200 ரூபாய் என்கிற விலையில் முதலில் தயாராகும் 10 கோடி தடுப்பூசிகளை இந்திய அரசுக்கு வழங்க ஆர்வமாக இருக்கிறோம் என்று சொன்னது. ஆனால், இந்திய அரசு தினசரி தன் தேவைக்கேற்ப வாங்கலாம் என்று உலக தடுப்பூசி கொள்முதல் போக்குகளில் இருந்து எதையும் கற்காமல் உறங்கிக் கிடந்தது.

சவுதி அரேபியா, பிரேசில், மொராக்கோ என பல நாடுகள் தடுப்பூசி தயாரிக்கும் சீரம் இன்ஸ்டிட்யூட்டுடன் கொள்முதல் ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. இந்தியாவில் இருந்து 6 கோடி தடுப்பூசிகள் பல நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின, முதலில் இந்திய பிரதமர் மோடி அவர்கள் உலகின் பல நாடுகளுக்கு தடுப்பூசிகளை அனுப்பி இந்தியாவை பெருமை மிகு தேசமாக மாற்றிவிட்டார் என பாஜகவினர் போஸ்டர் அடித்து ஒட்டிக் கொண்டிருந்த நேரம் தான், இந்த தடுப்பூசிகள் எல்லாம் சீரம் இன்ஸ்டிட்யூட் வெளிநாடுகளுடன், தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படியே இந்த ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது என்கிற தகவல்கள் வெளியாகின.

ஒருவழியாக ஜனவரி 2021ல் சீரம் இன்ஸ்டிட்டோடு இந்திய அரசு ஒப்பந்தம் போட்டது. முதல் கட்டமாக 11 கோடி தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்தது. ஆனால், இந்தியாவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியதும் ஏற்றுமதிக்கு தடைவிதித்தது இந்திய அரசு. சீரம் இஸ்டிட்டியூட் நிறுவனமும் அடுத்த தனது ஆலையின் விரிவாக்கத்தை இந்தியாவில் செய்யப் போவதில்லை என அறிவித்து, பெரும் ஆலையை இங்கிலாந்தில் நிறுவப்போவதாக அறிவித்தது. சீரம் இன்ஸ்டிட்டியூட்டோடு முன்னரே ஒப்பந்தம் போட்ட நாடுகள் காத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டன. இது சீரம் இஸ்டிட்டியூட்டிற்கும் இந்திய தேசத்திற்கும் உலக நாடுகள் மத்தியில் தலைகுனிவானது.

பாரத் பயோடெக் நிறுவனத்திற்கு 1500 கோடி ரூபாய் நிதியுதவியை சமீபத்தில் இந்திய அரசு அறிவித்திருந்தாலும்கூட, அவர்கள் இனித்தான் தங்களின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும், நிச்சயம் இதற்கு காலம் பிடிக்கும் என்று அறிவித்தது. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட கோவாக்ஸின் தடுப்பூசியின் விலை மத்திய அரசுக்கு 600 ரூபாய், மாநில அரசுக்கு 400 ரூபாய், தனியார் மருத்துவமனைகளுக்கு 1200 ரூபாய் என்று பாரத் பயோடெக் அறிவிக்க, இந்தியாவில் இந்த பாகுபாடு பெரும் சர்ச்சையாக மாறியது.

இந்தியாவில் தடுப்பூசி தயாரிக்கும் ஆற்றல் படைத்த 12 அரசு நிறுவனங்கள் இருக்கும் பட்சத்தில், சமீபத்தில் அரசு அதில் மூன்று நிறுவனங்களுக்கு தடுப்பூசி தயாரிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று இந்தியாவில் மக்கள் தடுப்பூசி போட தயாராக இருக்கும் நிலையில், இந்தியா எங்கும் தடுப்பூசிகள் இல்லை, அல்லது தினசரி 500 பேர் வரும் தடுப்பூசி மையங்களில் வெறும் 20-50 பேருக்கு மட்டுமே ஊசிகள் போடும் நிலை உள்ளது. முதல் சுற்று 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே போடும் வழி தெரியாமல், மாநில அரசுகள் கண்விழி பிதுங்கி நின்ற நிலையில், மோடி 18- வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மே 1, 2021 முதல் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும் என்று வெற்று அறிவிப்பை வெளியிட்டு நிலைமையை இன்னும் சிக்கலாக மாற்றியிருக்கிறார்.

இந்தியாவில் இதுவரை 20 கோடி பேருக்கு முதல் தவணை தடுப்பூசியும், 5 கோடி பேருக்கு இரண்டு தவணைகளும் முழுமையாக போடப்பட்டுள்ளது. ஆனால், இதே வேகத்தில் தடுப்பூசி போட்டால் இன்னும் இரண்டு ஆண்டுகளில்கூட நம்மால் அனைவருக்கும் தடுப்பூசி போட்டு முடிக்க இயலாது. இந்த தடுப்பூசிகளை போடுவதற்கு மோடி அரசு ஒரு இணையத்தில் பதிவுச் செய்ய சொல்கிறது அந்த இணையதளத்தில் பதிவு செய்வது என்பது அதிவேக இணைய வசதிகள் மற்றும் கணிணிகள் வைத்துள்ள நகர வாசிகளுக்கே குதிரை கொம்பாக உள்ளது, அப்படியிருக்க இந்தியாவின் கிராம்புறங்கள் இந்த பதிவிற்கு கொடுக்கப் போகும் விலை என்னவென்று தெரியவில்லை.



இந்தியர்களுக்கே தடுப்பூசி இல்லாத நிலையில், மோடி ஏன் வெளிநாடுகளுக்கு இலவசமாக தடுப்பூசிகளை வழங்கினார் என்ற கேள்வி எழுந்த வண்ணம் உள்ளது. உச்ச நீதிமன்றமும் மோடி அரசின் தடுப்பூசி குளறுபடிகளை கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கிறது. நாடுமுழுவதும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் கண்டிப்பாக கொரோனா தடுப்பூசி செலுத்த வேண்டும் என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கண்டிப்புடன் தெரிவித்துள்ளனர்.

மறுபுறம், இந்தியாவின் தனியார் மருத்துவமனைகள் கடுமையான விலையில் தடுப்பூசி திருவிழாக்களை நடத்தி வருகின்றன, ஐந்து நட்சத்திர விடுதிகள் தடுப்பூசிகளுக்கான சொகுசு பேக்கேஜ்களை அறிவித்து வருகின்றன. இந்தியாவின் பெரும் கார்பரேட்டு நிறுவனங்கள் தங்களின் ஊழியர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடும் பணிகளைத் தொடங்கியுள்ளன. வசதி படைத்தவர்களை அவர்களின் பணம் காக்கும்தான், ஆனால், மாநில அரசுகள் கொள்முதல் செய்ய முடியாமல் தவிக்கும் இந்த தடுப்பூசிகள் தனியாரின் கைகளுக்கு எப்படி சென்றன?

இந்நிலையில், இந்தியாவில் தடுப்பூசி தயாரிக்க வேண்டும் என்றால், அதற்கான முக்கிய மூலப்பொருட்கள் அமெரிக்காவில் இருந்துதான் வரவேண்டும், இப்பொழுது இந்தியா அமெரிக்காவிடம் மூலப்பொருட்களுக்கு மன்றாடி நிற்கிறது. கொரோனா நேரமும் மோடி தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட, தன்னை இந்த 'உலகமே கோவிட் தடுப்பை கையாள அழைக்கிறது' - என்று விளம்பர போஸ்டர்கள் ஒட்டித்திரிந்த நேரத்தில், தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதிலோ, மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலோ, களத்தில் செயல்படும் மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலோ கவனம் செலுத்தியிருக்கலாம்.

ஆனால், மத்திய அரசோ தடுப்பூசி விசயத்தில் இதனை எல்லாம் மாநில அரசுகளின் வேலை என கைகழுவ முயற்சித்து வருகிறது. மத்திய அரசிடம் இருக்கும் பணத்தில் இந்தியர்களுக்கு முழுமையாக தடுப்பூசிகளை வாங்கி, மாநிலங்களுக்கு அதனை விநியோகிக்கலாம்.

மோடியின் குளறுபடிகளால் இந்தியர்கள் உலக நாடுகளில் அரசுகள் தங்களின் மக்களை காக்க எடுத்துவரும் நடவடிக்கைகளை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மோடியோ தடுப்பூசிகளை முறையாக கொள்முதல் செய்யாமல், இல்லாத தடுப்பூசியின் சான்றிதழ்களில் சிரித்துக் கொண்டிருக்கிறார். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு, மோடியின் துக்ளக் தர்பாரின் காதுகளுக்கு இது எட்டுமா என்று தெரியவில்லை.

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சேவைக்கட்டணம் இல்லை
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்**



**வட்டி 3%**

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478

## நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

**Money Transfer Worldwide**

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · BOC · PEOPLE'S BANK · SEYLAN BANK PLC · HNB · SampathBank · NSB National Savings Bank · Cash Xpress

**Send Money to any Bank In Sri Lanka**

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# புயலுக்குப்பின்...

ஊழிக்காலம்-2

23



ஏறக்குறைய நூற்றி இருபது பெண்கள்வரையில் பார்வதியிடம் தையல் பழகினார்கள். பத்ராவை சீ.ஐ.டீயினர் கூட்டிச் சென்றபோது, அவள் தன்னிடமிருந்த துணிகளையும் நூல்வகைகளையும் பார்வதியிடம் கொடுத்துவிட்டே சென்றாள். பார்வதி அவற்றை தையல் பழக விரும்பிய - வசதியற்ற - பிள்ளைகளுக்குப் பகிர்ந்து, உருப்படிகளையும் அலங்காரப் பூக்களையும் வரைந்து கொடுத்து, தைக்கவும் பழக்கினாள். 'வூல்' நூலை வைத்துப் பின்னலையும் சிலர் பழகினர். ஒருவர் பின் ஒருவராக புதிய பின்னல் வகைகளையும் கண்டுபிடித்து சாதனை செய்தார்கள். அதையும் ஒருவருக்கொருவர் பழக்கி முன்னேறினர்.

இந்தப் புளொக்கிறிகு ஒருநாள் கப்டன் வந்தாள். வெளியே நின்றுகூட இவர்களுடன் பேசாதவள், அன்று மண்டபத்தின் உள்ளே வந்தாள். பார்வதி இருக்கும் மூலை நோக்கி வந்தாள். பார்வதியுடன் இரண்டு மூன்று பெண்கள் தையல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். இதனால் அவள் வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

அவள், "அம்மா" என்றழைத்ததும்தான் திடுக்கிட்டு எழுந்துநின்ற பார்வதி, "வாங்க" என்றாள்.

"வேலையா? சந்தோசமா இருக்கம்மா. முதல் இங்க வந்தா எல்லோரும் படுத்திருப்பாங்க. இப்ப எல்லாரும் ஏதோ ஒரு வேலைய செய்து கொண்டிருக்கிறாங்க"

"ஓ...நன்றி" - என்றவள் சில பிள்ளைகளின் ஆக்கப் பொருட்களைக் காட்டலாம் என நினைத்தாள்.

"ஜானு அந்தத் தலையணை உறையைக் காட்டு, மல்லிகா எங்க பாவாடையைத் தாங்கோ, மீனா உம்மட பேபி சூட்ட எடும்" - என மளமளவெனக் கட்டளையிட்டாள். அவள் கேட்டதற்கு மேலாகவே பிள்ளைகள், தைத்த ஆடைகளையும், பின்னிய பொருட்களையும் எடுத்துக் காட்டினர்.

கப்டன் அசந்து போனாள். "அடடா, ஒரு கண்காட்சியே வைக்கலாமே" - என்று கூறியவள் மகிழ்ச்சியுடன் விடைபெற்றாள்.

அந்த வாரமே யார் யாருடனோ தொடர்புகொண்டு, ஓரளவு துணிவகைகளையும் நூல்களையும், கூடவே நான்கு தையல் எந்திரங்களையும் "பீ" புளொக்கிற்கு பெற்றுக் கொடுத்தாள்.

இதேசமயம், இந்த புளொக்கிற்கான மேஜர் மாற்றம் நடந்தது. புதிதாக வந்த பெண் யானை போல இருந்தாள். அந்த சீருடையில் அவளுடைய தோற்றம் மகா கோரமாக இருந்தது.

வந்த உடனேயே அங்கிருந்த குழுக்களுக்கு தலைமையை மாற்றும் வேலையை செய்தாள். பார்வதியை ஐந்தாம் குழுவுக்கு லீடராகப் போட்டாள். பார்வதி அதை விரும்பவில்லை. எனினும் இங்கே எதற்கும் மறுப்புக் கூறமுடியாது. உடனே, "இது ராஜகாரிய உத்தரவு. மாட்டம் எண்டு சொல்ல முடியாது" - என்று பெரிய விரிவுரையே நடத்திவிடுவார்கள்.

இதற்குமுன், ஐந்தாம் குழு லீடராக இருந்தவள் ஜோதி. திருமணமான இரண்டாம் மாதம் இவளுடைய கணவன் கிளிநொச்சியில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டான். நன்கு ஆங்கிலம் பேசக்கூடியவள். புதிய கப்டனாக வந்திருந்தவள் லீசா. அழகிய பெண். இராணுவம் என்ற மமதையில்லை. வந்த அன்றே மாலை இந்த புளொக்கிற்கு வந்து பெண்களை "வாறீங்களா வொலிபோல் அடிப்பம்" என்று அழைத்தாள். பலர் முன்வந்தனர். எனினும் மைதானத்தில் நெற் கட்ட முடியாது. எனவே, விளையாட்டை கிரிக்கட்டாக மாற்றினர். அதற்கான உபகரணங்களை தனது சிப்பாய்களை விட்டு எடுத்துவந்தாள். அவர்களையும் விளையாட்டில் சேர்த்துக் கொண்டாள். ஆமி ஒருபுறம், பிள்ளைகள் ஒருபுறம் என்றில்லாமல் இரு தரப்பும் இரு குழுவிலும் கலந்தே நின்றனர்.

இப்படி தினசரி விளையாட வந்த போதுதான், ஜோதியுடன் லீசா நட்பானாள். அவளது கணவன் இறந்ததையிட்டு வருந்தினாள். பார்வதியுடனும் பேசிக் கொள்வாள். திடீரென ஒருநாள் அவள் விடுப்பில் போயிருந்தாள்.

ஜோதி கழிப்பறைக்குப் போகும்போது, சும்மா படுத்திருந்த தெருநாயை மிதித்தாள். அது அவளைக் கடித்துவிட்டது. அதற்காக அவள் வைத்தியசாலை செல்பவர்களுடன் தன்னை பதிந்து கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றாள். வைத்தியசாலையில் அவளை தங்கவைத்துவிட்டனர். இரண்டு மூன்று தினங்களில் அவள் தப்பியோடிவிட்டாள்.



இந்தச் செய்தியை மெதுவாகவே புளொக்கினுள் கசிய விட்டனர். இப்படி கடுமையான நோய்வாய்ப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டாலும் நோய் குணமானதும் வந்துவிடுவர். ஆனால், இரு வாரமாகியும் ஜோதி திரும்பவில்லை. படிப்படியாக வைத்தியசாலை சென்று திரும்புவோர் இந்த தகவலை கொண்டு வந்தனர்.

சந்திரமுகி அங்கு காவல் நிற்கும் இராணுவப் பெண்ணிடம் -

"என்ன ஒரு பிள்ளையைக் கீச விட்டாச்சு போல" - என்று வம்புக்கிழுத்தாள்.

"அ...அ...அவளப் பிடிப்பம், தெரியுந்தானே புடிச்சா அப்றம் நடக்குறது.." - என்றாள் சிங்களச் சிப்பாய்.

இது நடந்த இரண்டொரு தினங்களில் லீசா விடுப்பிலிருந்து வந்தாள். வந்ததும் ஜோதியைத் தேடி வந்தாள். பார்வதி அவளைப்பற்றி வந்த தகவலைக் கூறினாள்.

லீசா அவ்விடத்திலேயே பிரார்த்தனை செய்தாள். "தெய்யனே அவளைக் காப்பாற்று, அகப்படக்கூடாது" - என்று வாய்விட்டு முணுமுணுத்தாள். பார்வதி அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"பாவம் அம்மா அந்தப்பொண்ணு, எங்கயும் போய் நல்லா வாழட்டும்" - என்றாள்.

ஜோதி பிடிபடவேயில்லை. பத்ரா, சுபா, விஜி என பிடித்துக்கொண்டு போனவர்கள் அனைவரும் திருப்பிக் கொண்டுவந்து விடப்பட்டனர்.

உண்மையான அன்புடன் தமது மக்களுக்கும் போராளிகளுக்குமென புலம் பெயர்ந்தோர், 'வணங்காமண்' கப்பலில் அனுப்பிவைத்த பொருட்கள் லொரிகளில் வந்து இறக்கப்பட்டன. சகல பிள்ளைகளுக்கும் தனித்தனிப் பொதிகளாக அவை வழங்கப்பட்டன. நெத்தலிக்கருவாடு, பயறு, வெந்தயம், மிளகாய்ப்பொடி, உப்பு, சீரகம், கடலைப்பருப்பு, பாசுமதி அரிசி, ஆட்டாமா, கோதுமைமா, நூடுல்ஸ், கிழறப்பட்ட உணவு, தகரத்திலடைத்தது, குளிர்பானங்கள், பெண்களுக்கான மாதசுத்தி நப்கின்கள் என ஏராளமான பொருட்கள் வந்தன. அவை அனைத்துப் பிள்ளைகளுக்கும் கிடைத்தன.

பார்வதி ஒரு கண்காட்சி நடத்தி, பிள்ளைகளின் ஆக்கப்பொருட்களை விற்கலாம் என்று எண்ணினாள். ஆனால் பிள்ளைகளோ -

"கண்காட்சி வைப்பம். ஆனா, இவங்களுக்கு எங்கட பொருட்களை விக்கமாட்டம். நாங்க வீட்டுக்கு அனுப்புவம்" - என்றனர். இதையே எல்லோரும் சரியென்று ஒப்புக்கொள்ள, அவ்வாறே செய்ய முடிவானது. தையல் - பின்னல் பொருட்களுடன், ஒரு ஓவியக் கண்காட்சியும் வைக்கலாம் என்று ஓவியம் வரைவதில் திறமையுள்ள பல பிள்ளைகள் சொல்ல, அப்படியே முடிவானது பலர் தமது ஆக்கங்களை வரைய ஆரம்பித்தனர்.

கண்காட்சி வெளி வராண்டாவில் அமைக்கப்பட்டது. அற்புதமான வேலைப்பாடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. கப்டன் லக்மாலி தன் மேலதிகாரிகளுக்கு அறிவித்து அவர்களையும் கண்காட்சிக்கு அழைத்து வந்தாள். புகைப்படங்கள் எடுத்தனர். ஓவியங்களில் தர்சினி வரைந்த ஓவியம் ஒன்று முட்கம்பி வேலிக்கப்பால் பெற்றோரும், இந்தப்பக்கம் பெண்களும் நின்று தவிப்பதாக அமைந்திருந்தது. அந்த ஓவியமும் லேகா வரைந்த தண்ணீருக்காக அலைமோதும் காட்சியும் எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்தன. அந்த இரு ஓவியங்களையும் நான் எடுக்கலாமா என்று கேட்டு லக்மாலி வாங்கிக் கொண்டாள்.

அவற்றை அவள் தன் மேலதிகாரி ஊடாக புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பினாள். மறுவாரமே ஒற்றை முட்கம்பி வேலி அகற்றப்பட்டது. வெளியிலிருந்து வந்த ஊனமுற்றோர், குழந்தைகள் ஆகியோர் பக்கத்திலிருந்து பேசுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டன.

கப்டன் லக்மாலி பார்வதியிடம் -

"அம்மா, முதல் நாங்கள் இந்த புளொக்கிற்கு வாறதில்லை. இப்ப இதுதான் நல்லம். யார் வந்தாலும் நம்பி கூட்டிக்கொண்டு வரக்கூடிய இடம். நன்றி" - என்றாள்.

எதிரியிடம் நல்ல பெயர் வாங்கினால் நம்மவர்களுக்கு எதிரிதானே. இப்போ, பார்வதி திடீரென்று பலருக்கு எதிரியானாள். ஏனைய புளொக்குகளிலிருந்து அவளைப்பற்றிய அவதூறுகள் பரவ ஆரம்பித்தன. பார்வதி எதையும் பொருட்படுத்தவில்லை. காரணம், மிக முக்கிய இயக்கப் புள்ளிகள் அவளுடன் இருந்தனர். அவர்களுக்கு அவளைப்பற்றி நன்கு தெரியும்.

"அட...மம்மீ, சந்திரமுகிய சீ.ஐ.டீ. கூட்டிக்கொண்டு போறாங்கள்" - என்றாள் கலை ஓடிவந்து.

"அப்படியா!"

"ம்..." - என்ற விஜி சற்று யோசித்தாள்.

"மம்மீ, இண்டைக்கு எனக்காக பிரார்த்தனை செய்யிறீங்களா" - என்றாள் திடீரென்று.

"ஓ அதற்கென்ன நீயும் வா, இண்டைக்கு பின்னேரம் பஜனையும் இருக்கு" என்றாள் பார்வதி.

"கொஞ்ச நாளைக்கு முதல், கைது செய்யப்பட்ட பெண்புலி, கடத்தப்பட்டாள் என்ற செய்தி கேள்விப்பட்டனீங்களா"

"ஓம், அது ஒரு வருசமிருக்குமே?'

"ம், அந்தக் கடத்தப்பட்ட பெண்புலி நான்தான்."

"அதில நாலுபேரப் பிடிச்சதெண்டும்? மூண்டுபேர் குப்பி கடிச்சிட்டினமெண்டும் படிச்ச ஞாபகம்."

"ம்... சர்வதேசக் கடற்பரப்பில ஆயுதம் இறக்கப்போன டீமில இருந்தம். நெடுகப் போறதுதான். அண்டைக்கு நேவி வந்திட்டான். சண்டை நடந்தது. கிபீர் வந்திட்டுது. நானும் குப்பி கடிச்சனான். ஆனா குப்பி வேலை செய்யேல்ல, அதாலதான் வவுனியா கொஸ்பிட்டல்ல வச்சிருந்தாங்கள்."

"எல்லாஞ்சரி இப்ப ஏன் பயப்பிடுறாய்" - என்றாள் பார்வதி.

"சந்திரமுகிக்கும் இது தெரியும்" - அவள் கலகலப்பா பேசினாலும், இறுக்கமானவள். மற்றவையைக் காட்டிக் குடுக்கமாட்டாள்.

"அப்பிடித்தான் நானும் நினைக்கிறன். நீ கவலைப்படாதை" - என்று அவளைத் தேற்ற, மாலையில் மற்றவள் வந்தாள்.

"இவள் பானுவின் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தங்கை அதனால் பயப்படுகிறாள்" என்றாள்.

வேதனைகளைத்தாண்டி சோதனை வரும் என்பார்கள். இங்கோ சாதனைகளைத் தாண்டி வேதனைகளை அனுபவித்தார்கள். ■

# வலைஞர் பதிகம்










































IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST
PARISH PATIENCE IMMIGRATION LAWYERS FOUNDED 1888
MIA Migration Institute of Australia

Our large legal team provideds a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates


Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au


Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au


Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au


Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters
- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:
- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234

Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au


FSA/DET0016-03
3-YEAR-OLD KINDER
Best Start
Best Life
பெரும் கனவுகளைக் காண, நமது குழந்தைகளின்
வாழ்க்கைக்கு ஆகச் சிறந்ததொரு ஆரம்பம் தேவை.
இதன் காரணமாகவே, மூன்று வயதுக் குழந்தைகளுக்கான பாலர்-பள்ளிக் கல்வியை விக்டோரிய மாநிலம் முழுவதும் 2022-ஆம் ஆண்டில் விக்டோரிய அரசாங்கம் துவங்குகிறது.
புதிய பாலர்-பள்ளிகள், மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான புதிய வேலைகள் என்பனவற்றை இது குறிக்கும்.
இது குறித்து மேலதிகமாகத் தெரிந்துகொள்ளுங்கள்: vic.gov.au/kinder
THE EDUCATION STATE
VICTORIA State Government
Education and Training


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

# சனி வக்ர பெயர்ச்சி பலன்கள்

சனி வக்ர கதி மே 23 ஆம் திகதி (வைகாசி 9) ஆரம்பமாகி, அக்டோபர் 11ஆம் திகதி (புரட்டாசி 25) வரை நிகழ உள்ளது.

சனிபகவான் மெதுவாக நகரும் கிரகம் என்பதுடன், ஒரு ராசியில் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் தங்கியிருந்து பலன்கள், பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய கிரகமும்கூட. சூரியனுக்கு 251 பாகையில் சஞ்சரிக்கும் போது வக்ரம் பெற்று 109 பாகையில் இருக்கும் போது வக்ர நிவர்த்தியடைவார். சுமார் 140 நாட்கள் வக்ரகதியில் சஞ்சரிப்பார் சனிபகவான். அதாவது சூரியனுக்கு 9ஆம் வீட்டில் சனி வரும் போது வக்ரம் பெறுகிறார். சூரியனுக்கு 5ஆம் வீட்டில் சனி வரும் போது வக்ர நிவர்த்தி அடைகிறார்.

சனி ஏற்கனவே மெதுவாக நகரும் கிரகம் என்பதால் வக்ரம் பெற்றால் சனிபகவான் இன்னமும் மெதுவாக நகர்வார். நான்கரை மாதங்கள் சனி தற்போது சஞ்சரித்து வரும் திருவோண நட்சத்திரத்திலிருந்து உத்திராடம் நட்சத்திரம் நோக்கி பின்னோக்கி செல்வார். அதன் பின்னர் வக்ர நிவரத்தி அடைவார். சனி வக்ரம் பெற்றால், தான் தர வேண்டிய பலன்களை தர தடையும், தாமதம், இழப்பும் ஏற்படும். சுப பலன் தர வேண்டிய சனி வக்கிரம் பெற்றால் சுப பலனை தரமாட்டார்.

சனி வக்ர பெயர்ச்சியானது, 12 ராசிக்காரர்களுக்கும் எவ்வாறான பலன்களை தரும் என்பது தொடர்பில் ஜோதிட பார்வையை செலுத்துவோம்.

## மேடம்

சனி வக்ர பெயர்ச்சியால் மேஷ ராசிகாரர்களுக்கு தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய சூழல் உருவாகும். முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கலாம்.

எனவே, மேஷ ராசிக்கு சற்று அதிர்ஷ்டமான காலகட்டம் என்றே கூறலாம். இந்த காலத்தில் உங்களின் பொருளாதார நிலை சற்று உயரக்கூடியதாக இருக்கும்.

எனினும், வீண் செலவுகள் அதிகமாக செய்ய வாய்ப்புள்ளது என்பதால், செலவை கட்டுப்படுத்திச் சேமிப்பது நல்லது. அதேபோல் செலவுகளை சுப செலவாக மற்ற முயலவும். வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

## இடபம்

சனி வக்ர காலத்தில் சற்று கூடுதலாக கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம். நீங்கள் எந்த துறையை சேர்ந்தவராக இருந்தாலும் பெரிய முதலீடுகளை இந்த காலத்தில் செய்யாமல் இருப்பது சிறந்தது. தேவையற்ற வீண் விரயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பண பரிவர்த்தனையில் கவனம் வேண்டும். மே மாதம் முதல் அக்டோபர் வரை விழிப்புடன் செயற்பட வேண்டும். உங்கள் வாழ்க்கை துணை உங்களுக்கு அன்பும், ஆதரவுடன் இருப்பார். பிள்ளைகள் மகிழ்ச்சி தருவார்கள். உங்களின் திருமண முயற்சி, புதிய வீடு கனவுகள் நிறைவேற வாய்ப்புள்ளது.

## மிதுனம்

மிதுன ராசிக்கு அஷ்டம சனி நடந்து கொண்டிருக்கின்ற காலத்தில், தற்போது வக்ர சனி பெயர்ச்சி ஆறுதல் தரும் வகையில் நற்பலன்களைத் தருவதாக இருக்கும். தொழில் தடைகள், பிரச்னைகள் நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றத்தைத் தரக்கூடியதாக இருக்கும். மிதுன ராசிக்கு சனி வக்ர பெயர்ச்சி 2021 பலன்கள் - அனைத்திலும் யோக பலன்களைப் பெற்றிடலாம் குடும்பத்தில் சிறு கருத்து வேறுபாடு ஏற்படலாம். அதனால் பேச்சில் கட்டுப் பாட்டுடன் இருப்பது நல்லது. முன்யோசனை யுடன் எந்த விஷயத்திலும் செயல்படுவது நல்லது. மூத்தவர்களை மதித்து நடப்பதால் பெரியளவில் நன்மையைப் பெறுவீர்கள். பண பரிவர்த்தனை உங்களுக்கு பிரச்னை தரக்கூடியதாக இருக்கும் என்பதால் கவனம் தேவை.

## கடகம்

கண்டக சனி நடந்து கொண்டிருக்கும் கடக ராசிக்கு, இந்த சனி வக்ர பெயர்ச்சி ஓரளவுக்கு நன்மையைத் தருவதாக இருக்கும். எதிரிகளின் தொல்லை, மறைமுக பிரச்னைகள் நீங்கி உங்களின் செயலுக்கு ஏற்ற நற்பலனை நிச்சயம் பெற்றிடுவீர்கள். நிதி நிலை மேம்படும் என்பதால், உங்களின் கடன் தொல்லைகள் நீங்கும். சனி வக்ர காலத்தில் நற்பலன்கள் அதிகமாக ஏற்படும் என்பதால் சிறப்பாக பயன்படுத்திக் கொள்வது நல்லது. திருமண தடைகள், சுப காரிய தடைகள் நீங்கும் என்பதால் திருமண முயற்சியை எடுப்பது நல்லது.

## சிம்மம்

சிம்மம் - உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் சனி பகவான் தற்போது வக்ர நிலை அடையப் போகிறார். இதனால் உங்களின் நிதி நிலைமை மேம்படும். உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பிள்ளைகளால் இருந்த பிரச்னைகள் தீர்ந்து நன்மை உண்டாகும். வம்பு, வழக்குகளால் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கி உங்களுக்கு சாதகமான நிலை ஏற்படும். ஆரோக்கிய குறைபாடு நீங்கி, உடல் நலம் மேம்படும். உங்களின் சேமிப்பு சிறப்பாக இருக்கும். வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது சிந்தித்து செயற்படுவது சிறப்பாக அமையும்.

# சனி வக்ர பெயர்ச்சி பலன்கள்

## கன்னி

கன்னி ராசிக்கு 5ஆம் இடத்தில் சனி பகவானின் வக்ர நிலை ஏற்படுவதால் உங்கள் தொழில், வியாபாரத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள், தடைகள் நீங்கி நீங்கள் எதிர்பார்த்த நன்மை உண் டாகும்.

எனினும், உங்களின் உடல் ஆரோக்கிய பாதிப்பு ஏற்படலாம் என்பதோடு, தேவையற்ற பண விரயம், அல்லது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆகவே,பண விஷயத்தில் கவனம் தேவை. சுபகாரியங்களை முன்னெடுக் கும்போது நிதானம் தேவை.

நண்பர்கள் மற்றும் அயலவர்களால் நன்மைகள் பயக்கக்கூடும்.

## துலாம்

துலாம் உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அதே இடத்தில் வக்ர கதியும் அடைகிறார்.

தற்போது அர்த்தாஷ்டம சனியால் பல பிரச்னைகள், சங்கடங்களை சந்தித்து வந்தாலும், தற்போது நடக்கும் வக்ர சனியால் உங்களுக்கு பல வகையில் நற்பலன்களைப் பெறலாம்.உங்களுக்கு வரக்கூடிய புதிய வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அதே சமயம் தாயின் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பதோடு, பணம், பொருள் கொடுக்கல், வாங்கலை தற்போதைக்கு வேண்டாம். உடல் ஆராக்கியம் குறித்தும் கவனம் செலுத்துங்கள். புதிய முயற்சிகளில் இறங்கும் முன் அதுபற்றி ஆழமாக ஆராய்ந்து செயற்படுவது சாதக பெறுபேறுகளை தரும்.

## விருச்சிகம்

ஏழரை சனியிலிருந்து மீண்ட விருச்சிக ராசியினர் உங்களுக்கான பாதிப்புகளிலிருந்தும் சிறிது சிறிதாக மீண்டு வரும் நிலையில், தற்போது மேலும் உங்களின் பிரச்னைகள் குறையக்கூடியதாக இருக்கும். உங்களின் தேவை அதிகரிக்கும். அதே போல உங்களின் நிதி நிலைமை சிறப்பாக தான் இருக்கும். உங்களுக்கு இருந்த பணத்தட்டுப்பாடு, கடன் பிரச்னைகள் நீங்கும்.

உடல் ஆரோக்கியம் சிறக்கும். வீட்டில் நடக்க வேண்டிய சுப காரியங்கள், திருமண முயற்சிகளில் இருந்த தடைகள் நீங்கும். நல்ல வரன் அமைய வாய்ப்புள்ளது. வேலை தேடுவோருக்கு தகுந்த வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. சாதகமான விடயங்களுக்கே வாய்ப்பு அதிகம்.

## தனுசு

தனுசு ராசியினர் ஏழரை சனியின் இறுதிப் பகுதியாக பாத சனியால் ஆரோக்கிய பிரச்னைகள், நிதி நிலையால் மன உளைச்சலை சந்தித்தல் போன்ற பலன்களை அனுபவித்து வரக்கூடிய சூழலில், உங்களுக்குச் சற்று ஆறுதல் தரும் வகையில், இந்த வக்ர சனி காலம் அமையும்.

உங்களுக்கு நல்ல பலன்கள் அதிகம் கிடைக்கும் என்றாலும். புதிய தொழில் முயற்சிகள், முதலீடுகள், கடன் கொடுத்தல், வாங்கல் செய்ய வேண்டாம்.

அதே போல நிம்மதியான வாழ் வுக்கு குடும்ப உறுப்பினர்களுடன் தேவையற்ற கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்கவும். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும்.

## மகரம்

ஏழரை சனியின் முக்கிய கட்டமான ஜென்ம சனி நடந்து கொண்டிருக்கக்கூடிய சூழலில் சனி வக்ர நிலை அடைகிறார். வக்ர நிலையிலும் சனி உங்களுக்கு நற்பலன்கள் தருவது சிரமமே. குறிப்பாக குடும்பத்தினருடன் பேசும் போது சற்று கவனமாக, நிதானமாக பேசுவது அவசியம். கணவன் – மனைவி இடையே மனக்கசப்பு ஏற்படக்கூடும். அதனால் விட்டுக் கொடுத்து செல்லவும்.

மகர ராசி அதிபதியாக சனி இருந்தாலும், இந்த காலத்தில் பொருளாதார ரீதியாக சிக்கலை சந்திக்க வேண்டி இருக்கும். பண விஷயத்தில் கவனம் தேவை. உடன் பிறந்தவர்களை மதித்து செயல்படவும். வீண் வாக்குவாதங்கள் முற்றிலும் தவிர்க்கவும். தாய் வழி உறவுகளிடம் கவனம். வேலை, தொழில் என எதிலும் புதிய முயற்சிகள் வேண்டாம். இருக்கிற வேலையை விட்டு, சிரமப்பட வேண்டி இருக்கும்.

## கும்பம்

கும்ப ராசிக்கு விரய சனி ஆரம்பித்து ஏற்கனவே புலம்பிக் கொண்டிருப்பீர்கள். சிறிது ஆறுதல் கிடைக்காத என்ற மன நிலை இருக்கும். இருப்பினும், இந்த சனி வக்ர கதியால் எந்த மாற்றமும் இல்லாமல் ஏழரை சனி பலன்களையே அனுபவிக்க வேண்டி இருக்கும்.

ஆறுதல் விஷயமாக குரு அதிசாரமாக இருக்கும் காலம் வரை சற்று பிரச்னைகள் குறையும்.

உங்களின் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் தேவையற்ற வீண் செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. தொழில், வியாபாரம் சுமுகமாக இருக்கும். அதே சமயம் புதிய முதலீடுகள் வேண்டாம். பங்கு வர்த்தகத்தில் சிறிய முதலீடு நல்ல லாபம் தரலாம். சிறியளவிலான உடல்நலக் குறைபாடு ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## மீனம்

மீனம் ராசிக்காரர்களுக்கு இது லாப சனி காலம். சனி வக்ரமடையும் இந்த கால கட்டத்தில் உங்களுக்கு தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். திடீர் பண வருமானம் வரலாம். ஆடம்பர செலவுகளை குறைத்து விடுங்கள். ஆரோக்கியத்தில் சின்னச் சின்ன பாதிப்புகள் வரலாம் கவனமும் அக்கறையும் தேவை. உணவு விசயத்தில் கவனம்.

வெளியில் செல்வதையும் காரமான உணவுகளை சாப்பிடுவதையும் தவிர்த்து விடுங்கள். நீங்கள் எந்த துறையில் தொழில், வேலை செய்தாலும் அதில் லாபகரமான பலனைப் பெறலாம்.


NS Systems SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Digital TV Antenna
Ducted Vacuum
Solar CCTV
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

THE ONLY COMPANY WITH WEEKLY SHIPMNTS TO SRI LANKA

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)

WWW.TRANSCOCARGO.COM.AU